Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 06 வெள்ளிக்கிழமை (22.08.2014) பக்கங்கள் 20 ஓசை – 325

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

# 13ஐ அமுல்படுத்துமாறு அரசுடனேயே பேச வேண்டும்

## கூட்டமைப்பில் கிளம்பும் குரல்கள்

(கொழும்பு)

13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்தியப் பிரதமர் மோடியுடன் பேச்சு நடத்த வேண்டியதில்லை. அது தொடர்பாக இலங்கை அரசுடனேயே பேச்சு நடத்தலாமென கூட்டமைப்பிலுள்ள உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ள நிலையில் கூட்டமைப்பின் இந்தியப்பயணம் தொடர்பாக அக்கட்சிக்குள்ளேயே கருத்து முரண்பாடுகளும், விமர்சனங்களும் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

13 ஆவது திருத்தச்சட்டத்தை தும்புத் தடியாலும் தொட்டுப் பார்க்கமாட்டோம் என கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற விவாதம் ஒன்றில் கூறியிருந்தார்.

இந்த நிலையில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் பேச வேண்டிய அவசியம் இல்லை என்றும் அதனை இலங்கை அரசாங்கத்துடன் பேசித் தீர்க்கலாம் என்றும் கூட்டமைப்பின் சில உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

நரேந்திரமோடியுடன் 13 ஆவது திருத்தச்சட்டத்தை பற்றி பேசுவது என்றால் புதுடில்லிப் பயணத்தில் அர்த்தம் இல்லையென வன்னி மாவட்ட உறுப்பி

19 ஆம் பக்கம் பார்க்க

## கட்சிக்கு அடங்க மறுக்கும் மாகாணசபை உறுப்பினர்கள்

### மாவை கவலை

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது குறித்த கட்சியின் வடக்கு, கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் விசாரணைகளை விரிவு படுத்துமாறு கோரிக்கை விடுக்க கட்சி மாகாணசபை உறுப்பினர்களுக்கு அனுமதியளிக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா

19 ஆம் பக்கம் பார்க்க

## வரம்பு மீறும் பிரேரணைகள் வடமாகாணசபையில் முன்மொழிவு

### எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)

சிவாஜிலிங்கத்தினால் அவையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 7 பேர் நேற்று பிரேரணை முன்மொழிவில் கலந்து கொள்ளாது வெளிநடப்பு செய்தனர்.

இலங்கை மீதான சர்வதேச விசாரணை தொடர்பிலான 3பிரேரணைகளை சிவாஜிலிங்கம் முன்வைத்தவேளையில் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா தலைமையில் 7 உறுப்பினர்கள் உடனடியாக இப்பிரேரணையை புறக்கணிப்பதாக

19 ஆம் பக்கம் பார்க்க

## வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க ஏற்பாடு

### விசேட அமைச்சரவைப்பத்திரம் விரைவில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க அமைச்சரவைப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வடமாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவர்



சி. தவராசா நேற்று இடம்பெற்ற 14 ஆவது வடமாகாணசபை அமர்வின் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 12ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். செயலகத்தில் பிரதேச செயலர்கள் ஊடாக அந்தந்த பிரதேசங்களில் உள்ள வறட்சி நிலையில் பாதிப்புக்கள் தொடர்பில் கணக்கிடப்பட்டு தரவுகள் பெறப்பட்டு இனங்காணப்பட்டன. இதில் உடனடி நிவாரணங்கள், மற்றும் நீண்டகால தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

19 ஆம் பக்கம் பார்க்க

## உள்நாட்டில் ஆதரவைப்பெறவே ஐ.நா.குழுவிற்கு அனுமதி மறுப்பு

### கூறுகிறது சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

யுத்தக் குற்ற விசாரணையாளர்களுக்கு அனுமதி வழங்குவதில்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடு உள்நாட்டில் ஆதரவை பெறுவதை நோக்கமாகக் கொண்டது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஜோன் சிவ்டன் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணை செய்வது மற்றும் பொறுப்புக் கூறுவது தொடர்பாக அரசாங்கம் உண்மையில் எந்தவித அக்கறையையும் வெளிப்படுத்தவில்லை. இதன் காரணமாக ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு ஆச்சரியமளிக்கவில்லை. அவர்கள் தங்களை தாங்களே ஏமாற்றும் சூழலில் செயற்படுகின்றனர். அவர்கள் அந்த நிலையில் பாரிய மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்பதை நம்பவில்லை. தாங்கள் செய்தது அனைத்தும் மன்னிக்கக் கூடியது, நியாயப்படுத்தக் கூடியது என அவர்கள் கருதுகின்றனர். எதுவும் நடக்கவில்லை என்றும் நினைக்கின்றனர். சிங்கள வாக்காளர்கள் மத்தியில் ஆதரவை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டதே அரசாங்கத்தின் நிலைப்பாடு. உங்களது நாட்டின் இறைமை சர்வதேச சதியால்

19 ஆம் பக்கம் பார்க்க

## எதிர்க்கட்சித்தலைவரிடம் மாகாண அமர்வில் மன்னிப்பு

### கடற்றொழில் அமைச்சர் கோரினார்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணசபையின் நியதிச்சட்டம் உருவாக்க எமக்கு ஒத்தாசைபுரிந்த எதிர்க்கட்சித் தலைவரின் மனம் வேதனை அடையும் வகையில் தமது ஆளும் தரப்பினரால் கடந்த அமர்வில் பேசப்பட்டமைக்கு மன்னிப்புக் கோரினார் வடமாகாண கடற்றொழில் அமைச்சர் டெனீஸ்வரன்.

நேற்று இடம்பெற்ற 14ஆவது வடமாகாண சபை அமர்வின் போதே அவர் இவ்வாறு மன்னிப்புக் கோரினார்.

கடந்த மாகாணசபை அமர்வின் போது எதிர்க்கட்சித் தலைவர் மீது பல குற்றச்சாட்டுக்கள்


19 ஆம் பக்கம் பார்க்க

## விஜயகாந்த் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாதவர்களின் தாக்குதலில் முற்போக்கு தமிழ்த் தேசியக்கட்சியைச்சேர்ந்த செயலாளர் விஜயகாந்த் படுகாயமடைந்த நிலையில் யாழ். போத

19 ஆம் பக்கம் பார்க்க



# அடுத்த அமர்வு எதிர்வரும் 10 ஆம் திகதி

வடமாகாண சபையின் அடுத்த அமர்வு புரட்டாதி 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டது.

வடமாகாணசபையின் 14 ஆவது அமர்வு நேற்று இடம் பெற்றது இதன்போது வாய் மூல கேள்விகள் மற்றும் பிரேரணைகள், விசேட உரை கள் எனப் பல விடையங்கள் ஆராயப்பட்டன.

அதன்பிரகாரம் 2 வாரகாலத் தவணையின் அடிப்படையில் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு அவையின் செயற்பாடுகளை அவைத் தலைவர் சி.வி.கே.சிவ ஞானம் ஒத்திவைத்தார்.

# சிவாஜிலிங்கத்தின் பிரேரணைகள் மாகாண சபையில் நிராகரிப்பு



வடமாகாண சபையில் நேற்று இடம்பெற்ற அமர்வில் மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று பிரே ரணைகளும் நிராகரிக்கப் பட்டன.

தமிழ் மக்கள் மீதான இனக்கொலைகளில் இருந்து பாதுகாக்க சர்வதேச பொறி முறையை ஏற்படுத்துமாறு வேண்டும் பிரேரணையும், மனித உரிமைப் பேரவை ஆணையாளர் அலுவலகம் தனது விசாரணைக் கால எல்லையை நீடிக்கவேண்டு மெனவும் இனப்படுகொலை உட்பட சகல குற்றங்களையும் 1974 ஆம் ஆண்டில் இருந்து விசாரிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் பேரவை ஆணையாளர் அலுவ லகத்தினால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு இலங்கை யிலோ அல்லது இந்தியாவிலோ விசாரணைகளை நடாத்த அனு மதிக்க வேண்டும் என்ற 3 கோரிக்கைகளையும் அவைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப் பட்டு நேற்று அவையால் வாசிக் கப்பட்டபோது அவை தற்போது நடைபெற்று வரும் சர்வதேச விசாரணையை குழப்பும் வகை யில் அமையக் கூடும் என்று பல காரணங்கள் முதலமைச்சர் மற்றும் சிவமோகன், சர்வேஸ் வரன் போன்ற ஆளும் கட்சி உறுப்பினர்களால் விமர்சிக்கப் பட்டதுடன், இது காலம் கவ னத்தில் கொண்டு பிரேரிக்கப்பட வேண்டிய விடயம் எனத் தெரிவித்து இரு பிரேரணைக ளும் நிராகரிக்கப்பட்டதுடன் இதில் உள்ள முதலாவது பிரே ரணை தொடர்பில மீண்டும் கட்சி மட்டத்தில் ஆராய்ந்த பின்னர் திருத்தங்கள் மேற்கொண்டு 2 வாரங்களில் விசேட அமர்வில் சமர்ப்பிக்கலாம் என அவைத் தலைவரின் அறிவிப்பைத் தொடர்ந்து பிரேரணைகள் நிரா கரிக்கப்பட்டன. (இ)


## டயானா பிளாஸ்ரிக்

***றீசைக்கிள் (மீள் சுழற்சி)***

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)


# நியமனம் கோரி டிப்ளோமாதாரிகள் மாகாணசபை முன்றலில் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமாதாரிகள் தமக்கான நியமனங்களை வழங்குமாறு கோரி நேற்று வடமாகாண சபை முன்றலில் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண் டிருந்தனர்.

நேற்றுக் காலை மாகாண சபை அமர்வு ஆரம்பமாக இருந்த வேளையில் பதாகைகளை ஏந்தி யவாறு போராட்டத்தை மேற் கொண்டனர்.


'எப்போது எமது நியமனம் கிடைப்பது' "எமது பாடங்களுக்கு பாடசாலைகளில் வெற்றிடம் உள்ள போதும் எமது வாழ்வில் வெற்றிடம் ஏன்?" "ஏனைய டிப்ளோமா தாரிகளுக்கு நியமனம் எமக்கு மட்டும் ஏன் இந்தநிலை", "எமது எதிர்காலம் வளமாவது எப்போது?" என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு இவர்கள் போராட் டத்தில் ஈடுபட்டதுடன் மாகாண சபை அமர்வின் தேனீர் இடை வேளையின் போது முதலமைச் சரிடம் கடற்றொழில் அமைச்சர் டெனிஸ்வரனிடமும் போராட்டத் தில் கலந்து கொண்டோர் நியம னம் தொடர்பில் மனுக்களைக் கையளித்தனர். (இ)

# மாற்றுத் திறனாளிகளுக்கு வாழ்வாதாரப் பயிற்சி

உலக வங்கியின் 5.5 மில்லி யன் ரூபாய் நிதியுதவியின் கீழ் சமூகசேவைகள் அமைச்சினால் மாற்றுத்திறனாளிகளுக்கு 6 மாத கால வாழ்வாதாரப் பயிற் சிகள் தற்போது கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் வழங்கப்பட்டு வருகின்றன.

20 மாற்றுத் திறனாளிக ளுக்கு தையல் பயிற்சி மற்றும் தொலைபேசி திருத்தல் போன்ற பயிற்சிகள் கடந்த ஜுலை மாதம் 28 ஆம் திகதி முதல் வழங்கப் பட்டு வருகின்றன.

# மருதங்கேணி மக்களின் தேவைகள்; களநிலையில் நேற்று ஆராய்வு



வடமராட்சி கிழக்கு மருதங் கேணி பகுதிக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ தேவானந்தா மருதங்கேணி பிரதேச செயலக வளாகத்தில் அப்பகுதி மக்களைச் சந்தித்தார்.

அப்பகுதி மக்கள் எதிர்நோக் கியுள்ள வீட்டுத்திட்டங்கள் தொடர்பிலான சிக்கல்களைத் தீர்த்து வைக்கும் முகமாகவே இச்சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது பிரச்சினைக ளுக்கு உள்ளாகியிருக்கும் மக்களின் முறைப்பாடுகளைத் தனித்தனியாகக் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் அப்பிரச்சி னைகளை சுமுகமாகத் தீர்த்து வைத்தார்.

மேலும் மலசலகூடங்கள், காணிகள், கிணறுகள் போன்ற தேவைகள் தொடர்பிலும் [illegible]ய அவதானங்கள் செலுத்தப்பட்டு அவற்றுக்கும் தீர்வு காணப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அன்னதான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாநகரசபை நீர் வேலைப் பகுதிப் பணியாளர்களின் கலியுகவரதன் இந்து மன்றத்தினால் 2005 ஆம் ஆண்டு முதல் யாழ். மாநகரசபை இந்துவிடுதி அலு வலகத்தில் நடாத்தப்பெற்றுவந்த தேர்த்திருவிழா, தீர்த்தத் திரு விழா அன்னதான நிகழ்வானது இவ்வருடம் யாழ்.மங்கையர்க் கரசி வித்தியாலயத்தில் நடாத் துவதற்கு நல்லூர்க் கந்தனின் அருள் கைகூடியுள்ளது இந்த அன்னதான நிகழ்வு வழமை போன்று காலை 9 மணி முதல் நடைபெற இருப்பதால் சகல அடியார்களும் கலந்து சிறப் பித்து கந்தன் அருள் பெற்றேகு மாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள் ளது.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. [illegible] திகதி 20-08-2014

ஆங்கில எழுத்து: B

வெற்றி எண்கள் 22 33 39 54

போனஸ் இல: 05

ஜக்பொட் பரிசு ரூ.15,286,650/- வெல்லப்படவில்லை

| [illegible] | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 229559 | 20/- | 4,591,180/- |
| 2 இல | 16468 | 100/- | 1,646,800/- |
| 3 இல | 330 | 1,000/- | 330,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9260 | 40/- | 370,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 633 | 1,000/- | 633,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,286,650/- | - |
| 1 இல + போனஸ் இல | 10689 | 100/- | 1,068,900/- |
| 2 இல + போனஸ் இல | 523 | 500/- | 261,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 470 | 200/- | 94,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 11 | 1,500/- | 16,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 268161 | | 10,652,280/- |


இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 15,913,300/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3761)


# "யாருமற்ற தீவினிலே" வெளியீட்டு விழா



(யாழ்ப்பாணம்)

வயவையூர் கை.சீதாராமனின் "யாருமற்ற தீவினிலே" கவிதை நூல் வெளியீடு ராஜாகிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நேற்று சிறப்புற வெளி யிட்டு வைக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு அரியாலையூர் எம்.வீ.கே. குமணா தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் நூலை வெளியிட்டு வைக்க வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர் சுப்பிர மணியம் மணிராசா அதனைப் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக நிகழ்வின் அதிதிகள் மலர் மாலை அணிவிக்கப் பட்டு மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டு மங் கள விளக்கேற்றி. வைத்ததைத் தொடர்ந்து நிகழ்வு ஆரம்பமாகியது.

வரவேற்புரையைத் தொடந்து வாழ்த்துரைகள் ஓய்வுநிலை மாவட்ட நீதிபதியும் விகடகவியு மான மு.திருநாவுக்கரசு, சி.வி. மணிஅன்னை தாசன் தெல்லிப்பளை பிரதேச செயலா ளர் இ.சிறிமோகனன் ஆகியோர் நிகழ்த்தினர்.

வயவையூர் சீதாராமனின் இரண்டா வது நூலாக 'யாருமற்றதீவினிலே' என்ற கவிதை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் இவரது முதல் நூல் தென் னிந்தியாவிலே வெளியிட்டு வைக்கப்பட்டது. இவர் ஒரு துடிப்பு மிக்க இளைஞர் தொடர்ந்து இவ் வாறான படைப்பை எமது மக்களுக்காக தொடர்ந்து தர வேண்டும் என்றும் வாழ்த்துரை வழங்கிய பலரும் குறிப்பிட்டனர் நூலை வாசித்தால் தொடர்ந்து வாசிக்கத் தூண்டும் விதத்தில நூல் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

# நெற் செய்கையை மேற்கொள்ள முல்லை விவசாயிகள் ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி- முல்லைத்தீவு மாவட்டங்களின் பகுதிகளில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருவதனை அடுத்து விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கால போக விவசாய நடவடிக்கைகளுக்கு மழையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் கடந்த சில தினங்களாக இந்த மாவட்டப் பகுதிகளில் மழை பெய்ததனை அடுத்து தமது வயல் நிலங்களைத் துப்புரவு செய்து நிலத்தை உழுது பண்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே இந்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட சிறு போக விவசாயம் நீர்பற்றாக்குறை மற்றும் போதிய மழை வீழ்ச்சி இல் லாததன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் கால போகத்திற்கு மழை பெய்யுமிடத்து காலபோக விவசாய நடவடிக்கைகளை முழுவீச்சில் மேற்கொள்ள விவசாயிகள் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் நெற் பயிர்ச் செய்கைக்கு விதை நெல் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் நெற் பயிர்ச் செய்கையில் ஏற்பட்ட பாதிப்பின் விளைவாக தேவையான அளவு விதை நெல்லைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# கண் சிகிச்சை பிரிவு அமைக்க மாநகர சபை காணி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் புதிய கண் சிகிச்சைப் பிரிவு அமைப்பதற்கு யாழ். மாநகர சபை தனக்குச் சொந்தமான காணியை யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் யாழ். மாநகர சபையின் விசேட பொதுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் ஏகமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரினால் போதனா வைத்திய சாலையின் அபிவிருத்திக்குழுவின் ஊடாக மாநகரசபையிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதற்கு அமைய வைத்தியசாலையுடன் இணைந்த பழைய மின்சார நிலையம் அமைந்த பகுதியில் அதுவும் பழைய டச்சுக்கரது கட்டடம் அமைந்த பகுதியில் அதே கட்டடத்தை அழகுபடுத்திஇக்கண் சிகிச்சை பிரிவு ஆரம்பிக்கப்பட வேண்டும் என இத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது.

இது விடயம் தொடர்பில் வைத்தியர் பவானந்தராஜா இவ் விசேட கூட்டத்தில் விளக்கம் அளித்ததுடன் காணி வழங்கியதற்காக மாநகர சபையினருக்கும் நன்றி தெரிவித்தார். விரைவில் இதற்கான பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ,48)



கைதடி நவபுரம் கிராமத்தின் சிறுவர்களை ஒன்றிணைத்து யாழ். விழுதுகள் நிறுவனத்தினால் சத்துணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. சிறார்கள் வீட்டிலிருக்கும் சத்தான இலைகளையும் இலைக்கஞ்சிக்கு தேவையான மேலதிக பொருட்களையும் கொண்டு இச்சத்துணவுத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சிறார்கள் இலைக்கஞ்சி அருந்துவதைக் காணலாம். (51)

# அந்திராயன் சந்தையை புனரமைக்க கோரிக்கை

கரணவாய் அந்திராயன் சந்தையில் அடிப்படை வசதிகளை மேற்கொண்டு தருமாறு பாவனையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அந்திராயன் சந்தைப் பகுதியில் மீன் சந்தை, மாட்டிறைச்சிக் கடை மற்றும் மரக்கறிச் சந்தை என்பன காணப்படுகின்றன. இப்பகுதியில் மலசலகூட வசதிகளோ, குடி தண்ணீர் வசதிகளோ எவையும் செய்து கொடுக்கப்படவில்லை. இதனால் வியாபாரத்தில் ஈடுபடுவோர் பெரும் சிமரங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்தோடு இங்கு அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் வீழ்ச்சி அடைந்து வருவதாகவும் இதனால் இச்சந்தையை குத்தகைக்கு எடுத்தவர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாக கரவெட்டி பிரதேச சபையினரிடம் பல தடவை முறையிட்டபோதும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதி பொதுமக்களினதும், வியாபாரிகளினதும் நலன் கருதி இச்சந்தைப் பகுதிக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (18)

# இனப்பிரச்சினையால ஆருக்கு லாபம்..?




இனப்பிரச்சினையால ஆருக்கு அதிக லாபம்? தமிழர்களுக்கா, சிங்களவர்களுக்கா, அரசியல்வாதிகளுக்கா, ஊடகக்காரர்களுக்கா, இந்தியாவுக்கா, அமெரிக்காவுக்கா, ஐ.நா.வுக்கா, அரசியலை வாய் ஓயாமல் கதைச்சுக்கொண்டிருக்கிற ஆட்களுக்கா, அரசியல் ஆய்வாளர்கள், விமர்சகர்களுக்கா சொல்லுங்கோ பாப்பம்.

என்னைப் பொறுத்தவரையில, இனப்பிரச்சினையால மற்ற எல்லாத் தரப்புக்கும் கொள்ளை லாபம் கிடைக்கும். ஆனால், சனங்களுக்கோ முழு நட்டமும் பெரும் பாதிப்புமே கிடைக்கும். ஆனால், இதை இந்த பாழாய்ப்போன சனங்கள் உணருகிறதாய் தெரியேல்ல.

பாருங்கோ, இதுவரையில நடந்த இனப்பிரச்சினையால சனங்கள் என்னமாதிரி எல்லாம் கஸ்டங்களைப் பட்டதுகள்.

ஆனால், இதுக்குள்ள அரசியல்வாதிகள் நல்லா தின்டு கொழுத்திருக்கினம். இனவாதத்தை வளர்த்து வளர்த்தே தங்கள் வயிற்றையும் வளர்த்திருக்கினம்.

இனமானம் என்டு சொல்லிச் சொல்லியே சனங்களை ஒட்டாண்டிகளாக்கிப் போட்டு தாங்கள் மட்டும் செழிப்பாய் இருக்கினம்.

இந்த இனப்பிரச்சினையை தீர்க்காமல் வச்சிருந்தால் இதை வச்சே எல்லாரும் பிழைப்பினம். ஆனால், தமிழ்ச் சனங்கள்தான் இதால மோசமாகப் பாதிக்கப்படுவினம்.

ஏனெண்டால், இனப்பிரச்சினை இருக்க இருக்க நாட்டிலயும், ஊருக்குள்ளயும் பதற்றம் கூடும்.

பதற்றம் கூடக்கூட சனங்கள் எப்படியாவது சொந்த மண்ணில இருந்து வெளியேறி வெளிநாடுகளுக்கு போகத்தான் யோசிப்பினம்.

ஏற்கனவே, வெளிநாட்டு மோகத்தால பித்துப் பிடித்துப்போய் இருக்கிற தமிழ்ச் சனத்திற்கு இதுதான் விருப்பமும்.

இப்பிடி, வெளியால போக விரும்புகிற ஆக்களுக்கு ஊருக்குள்ள பதற்றம் என்ட நிலைமை இருந்தால் வலு வசதியாய் போய்விடும் என்டு நினைக்கினம்.

இதால இந்த மாதிரியான ஆக்களும் இனப்பிரச்சினை தீருகிறதை விரும்பேல்ல.

இனப்பிரச்சினை தீராமல் இருக்குது என்டு வெளியில காட்டி வெளிநாடுகளில அரசியல் தஞ்சம் கோருகிற ஐடியாவோட இருக்கிற ஆக்கள்தான் இனவாத அரசியலுக்கு ஆதரவு கொடுக்கிறவை.

இவைதான், விடாத பிடி என்டு எல்லாத்தையும் சூடாக்கிறவை.

இப்பிடி, எல்லாவற்றையும் சூடாக்கி சூடாக்கித்தான் நாட்டையே சுடுகாடாக்கினவை.

இப்பவும் ஏட்டிக்குப் போட்டியாக இந்த சூடாக்கிற வேலையைப் பார்த்தால் நாளைக்கு நாட்டில தமிழ் விகிதாசாரம் நல்லாய் குறைஞ்சு போகும்.

தமிழ் விகிதாசாரம் இப்பிடி குறைஞ்சு போகிறதுக்கு இந்த வெங்காயத் தலைகள்தான் காரணம்.

ஆனால், இதை இவை ஒரு நாளும் ஒத்துக்கொள்ள மாட்டினம்.

எல்லாப் பழியும் இலங்கை அரசுக்கே என்டு சொல்லித் தங்கட கோவணத்தை அவுத்து உதறுவினம்...

இல்லாட்டி இந்தியா, அமெரிக்கா, ஐ.நா., ஆபிரிக்கா என்டு உவை ஒருத்தரும் சரியா நடந்துகொள்ளேல்ல என்டு பின்புற மண்ணைத் தட்டிவிட்டுப் போவினம்...

இந்த பேய்க் குணத்தாலதான் தமிழினமே முகக்குப்புற விழுந்துபோய் கிடக்குது.

கறக்கத் தெரியாதவன், மாடு காலால அடிக்குது என்டிட்டுப் பாத்துக்கொண்டு சும்மா நிக்கிறதை, பசியில வதங்கிற சனமும் பாத்துக்கொண்டு சும்மா நிக்குது... என்ன செய்ய...

முந்தி ஒரு தடவை குமுதத்தில போட்டிருந்த கார்ட்டூனைப் போல தமிழீழம் என்டது தனி ஈழமாகத்தான் மிஞ்சப்போகுது. சுருக்கமாகச் சொன்னால் இனப்பிரச்சினையை வளர்த்தால், இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் விட்டால் தமிழர்களுக்குத்தான் உச்சப் பாதிப்பு.

சிங்களவர்கள் முழு ஈழத்தையும் சொந்தமாகக் கொண்டாடுகின்ற ஒரு வாய்ப்பை அள்ளி அவையின்ர மடியில எங்கட ஆக்கள்தான் வைக்கப் போயினம்.

இந்த பேய்த்தனமான செயலினை எப்படி தடுத்து நிறுத்துவது என்டதைப் பற்றி விசயம் விளங்கின ஆக்கள் கொஞ்சம் சிந்தியுங்கோ.

வாழ்க்கையில் எப்போதும், சமாதானத்தையும் சகிப்புத்தன்மையையும் நமது இலட்சியமாக கொள்ள வேண்டும். - பாரதியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## காலத்தை வீணாக்குதல்...

இன்னும் இருபது ஆண்டுகளுக்கு அதாவது 2035 வரை அமெரிக்காவோ சீனாவோ இந்தியாவோ ரஷ்யாவோ போர் ஒன்றைத் தொடக்கி விடுவதற்கு வாய்ப்பில்லை என்று எழுதுகிறார் ரஷ்ய ராணுவத்துறை ஆய்வாளர் ஒருவர்.

படைபலச் சமநிலையில் சீனா முன்னேறுவதற்கு அவ்வளவு காலம் எடுக்கும்; அதன்பிறகுதான் போருக்கான வாய்ப்புகள் உருவாகக் கூடும் என ஆதாரங்கள் காட்டி எழுதுகிறார் அந்தக் கட்டுரையாளர்.

அதுபோல, மோடி அரசு பதவியிலிருக்கும் வரை இலங்கை அரசைத் தவிர்த்துவிட்டு அல்லது அதன் அங்கீகாரமின்றி இந்தியா தமிழ்த் தரப்புடன் பேசாது என்று இந்திய அரசின் ஆலோசகர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்நிலையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உடனடித் திட்டம் என்ன என்பதை அவர்கள் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டியது அவசியம். சர்வதேச ரீதியாக தமிழ் மக்களுக்குச் சார்பான எந்த மாற்றம் சமீபகாலத்தில் நிகழுமென்று எமது மக்கள் வாழ்வுச் சுமைகளுடன் காத்திருக்க வைக்கப்படுகிறார்கள் என்பதைக் கூட்டமைப்பினர் மக்களுக்கு விளக்க வேண்டும்.

ஓஷோ சொன்ன ஒரு குட்டிக்கதை.

ஒரு ஆற்றின் கரையினிலே மாமரம் ஒன்று நின்றது. அதில் அண்ணன், தம்பி என இரண்டு கிளைகள் இருந்தன. ஒரு நாள் கடும்புயலும் மழையும் அடித்து, வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. அடித்த காற்றில் தம்பி கிளையும், அண்ணன் கிளையும் முறிந்து ஆற்றில் விழுந்தார்கள்.

தம்பி கிளை கத்த ஆரம்பித்தது. "என்ன இது அநியாயம்... மரத்தில் இருந்த என்னைக் காற்று இப்படி ஒடித்துப் போட்டு விட்டதே... அதுவும் இப்படி ஆற்றில் விழுந்து செல்லும்படி ஆகி விட்டதே..." என்று அழுது புலம்பிக்கொண்டே இருந்தது.

அண்ணன் கிளை, "ஆற்றுத் தண்ணீர் நல்ல குளிர்ச்சியாக இருக்கிறதே..." என்றது.

இதைக் கேட்ட தம்பி கிளைக்குக் கோபம் வந்தது. "ச்சீ... நீயெல்லாம் மரக்கிளையா? ஆற்று நீரின் அற்ப குளிர்ச்சியின் மகிழ்ச்சிக்கு மயங்குவதா?" என்று சத்தம் போட்டது. இறைவன் முதல் அனைவரையும் திட்டித் தீர்த்தது. எவ்வளவு அழகாக மரத்தில் இருந்த தன்னை இப்படி ஆற்றில் அடித்துச் செல்வதுடன் பாறையிலும், கரையிலும் முட்டி மோதிக் காயம்படும்படியும் ஆகிவிட்டதே என்று புலம்பியபடி ஆற்றில் போய்க் கொண்டிருந்தது.

அண்ணன் ஆற்று நீரோட்டத்தை எதிர்த்துத் தன்னால் எதுவும் செய்ய முடியாததை உணர்ந்துகொண்டு, பாறைகளில் மோதி உடைந்துவிடாது தன் பயணத்தை எப்படி இலகுவாக்கலாம் என்று கண்டு போய்க் கொண்டிருந்தது.

இரு கிளைகளும் கடலை நெருங்கின. தம்பிக் கிளை பதறியது. "அண்ணா, நம் கதை முடிந்தது. இனி நாமிருந்த கரைக்குச் செல்ல வாய்ப்பில்லை." என்றது.

"ஆமாம் தம்பி. அது எனக்குத் தெரியுமே" என்றது அண்ணன் கிளை.

"தெரியுமா? அது தெரிந்துமா மகிழ்ச்சியுடன் வருகிறாய்?"

"ஆமாம், எல்லா ஆறுகளும் கடலையே சேருவது தெரிந்ததே. இது நம்மால் கட்டுப்படுத்த முடியாத காட்டாற்று வெள்ளம். நமக்கிருந்தது இரண்டே வழிகள்தான். ஒன்று அதை ஏற்றுக் கொண்டு கஷ்டத்தை இனிமையாக மாற்றி மகிழ்ச்சியாக இருப்பது. மற்றொன்று, எதிர்த்துக் கொண்டு மன அழுத்தத்துடன் பயணிப்பது. நீயோ இரண்டாம் வாய்ப்பை எடுத்தாய். அழுது கொண்டே வந்தாய். ஆனால் நான் கிடைத்த சொற்ப காலத்தை மகிழ்ச்சியாக்கி வந்தேன். வாழ்க்கை என்பது ஒரு பயணம். நாம் பயணத்தை எடுத்துக் கொள்ளும் வழியில்தான் நம் மகிழ்ச்சியும் துன்பமும் இருக்கிறது" என்றது அண்ணன் கிளை.

"நீ சொல்வது சரிதான் அண்ணா... நான் கிடைத்த காலத்தை வீணாக்கி விட்டேன்" என்றது தம்பி கிளை. - *ஆசிரியர்*

# தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் அரச வளங்களின் பயன்பாடு அதிகரிப்பு

## தேர்தல்கள் செயலகம் குற்றச்சாட்டு

ஊவா மாகாண சபைத் தேர்தலின் பிரசார நடவடிக்கைகளுக்கு அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரச வளங்களை பயன்படுத்துவது அதிகரித்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவிக்கின்றது.

இந்த விடயம் தொடர்பில் 10 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, அரச உத்தியோகத்தர்களை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் சம்பவங்கள் தொடர்பில் 6 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

ஊவா மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் 33 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

சட்டவிரோத போஸ்டர், 'கட்அவுட்'களை காட்சிப்படுத்துதல் தொடர்பில் 10 முறைப்பாடுகள் செய் யப்பட்டுள்ளன.

இதனைத்தவிர, அரசியற் காரணங்களுக்காக அரச உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்குவது தொடர்பிலும் 5 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக அச் செயலகம் மேலும் தெரிவித்துள்ளது.

# மாந்தை கிழக்கு பிரதேச சபையில் 37 பணியாளர்களுக்கு பற்றாக்குறை

மாந்தை கிழக்கு பிரதேச சபையில் வரி அறவீட்டாளர் உள்ளிட்ட 37 உத்தியோகத்தர்களுக்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாக மாந்தை கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் அம்பலவாணன் தனிநாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிரதேச சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 5 பேரும், முகாமைத்துவ உதவியாளர்கள் இருவரும், சுகாதார சேவையாளர்கள் இருவரும், வரி அறவீட்டாளர்கள் இருவரும், சாரதிகள் மூவரும், அலுவலக உத்தியோகத்தர்கள் இருவரும், காவலாளி ஒருவரும், ஆயுர்வேத மருத்துவர் ஒருவரும், மின் இணைப்பாளர் ஒருவரும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இருவரும், ஆயுர்வேத மருந்தாளர் ஒருவரும், முறைசார ஊழியர்கள் 15 பேரும் தேவையாகவுள்ளது. வரி அறவீட்டாளர்கள் இல்லாமையால் பிரதேச சபைக்கு போதிய வருமானம் ஈட்ட முடிவதில்லை இதனால் அபிவிருத்திப் பணிகளையும் முன்னெடுக்க முடியவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்படமாட்டாது

எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட மாட்டாது என எரிபொருள்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

சூழலுக்கு மாசு ஏற்படாத புதிய டீசல் ஒன்றின் அறிமுகம் தொடர்பில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்துடன் இன்று முதல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நான்கு நட்சத்திர தரமுடைய அதிசிறந்த லங்கா சுப்பர் டீசலை வழங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த புதிய வகை டீசல் பாவனையின் மூலம் வாகனத்தின் இயந்திரத்தின் தொழிற்பாடு அதிகரிக்கும். எரிபொருள் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இன்று முதல் இந்த புதிய ரக டீசல் விநியோகிக்கப்படுமென்றார்.

அதன்போது தற்போது விநியோகத்தில் உள்ள எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்படுமா என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த அமைச்சர் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட மாட்டாது என குறிப்பிட்டார்.

## முதிரை தீராந்தி கடத்தியவருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம்

கிளிநொச்சிப் பகுதியில் இருந்து அனுமதியின்றி கன்டர் வாகனத்தில் முதிரைமரத் தீராந்திகளைக் கடந்த மாதம் கடத்திச் சென்ற நபருக்கு 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் நேற்று உத்தரவிட்டார்.

மேற்படி தண்டப் பணம் கட்டத்தவறினால் 2 மாதங் கள் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என நீதவான் கூறினார்.

மேற்படி நபர், கிளிநொச்சிப் பொலிஸாரால் கடந்த மாதம் கைது செய்யப்பட்டு, கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது, நீதிமன்றம் பிணை வழங்கியிருந்தது.

இந்நிலையில், மேற்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நீதவான் தண்டம் விதித்தார்.

## அனைவரையும் ஒன்றிணைய கோருகிறார் ரணில்

இனம், மதம் என்று வேறு படாமல் இலங்கையர்கள் என்று அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில். கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையர்கள் அனைவரும் இன, மத பேதமின்றி ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அவரவர் தங்கள், மதம் இன கலாசாரத்தை முன்னெடுத்துச் செல்ல உரிமையுண்டு. என்றாலும் இதனை அடிப்படையாகக் கொண்டு பிரிந்து செல்வது ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

# அழகு நிலைய ஊசிகளால் எயிட்ஸ் பரவும் அபாயம்

## மருத்துவர் சாலுக்யா குணசேகர எச்சரிக்கை

முகத்தில் உள்ள பருக்கள், கரும்புள்ளிகளை அகற்ற அழகு நிலையங்களில் பயன்படுத்தப்படும் ஊசிகள் ஊடாக எயிட்ஸ் மற்றும் செங்கமாலை ஆகிய நோய்கள் பரவும் ஆபத்து இருப்பதாக இலங்கை சரும நோய்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவியான மருத்துவர் சாலுக்யா குணசேகர தெரிவித்துள்ளார்.

அழகு நிலையங்களுக்குச் செல்லும் சிலர் தமது முகத்தில் இருக்கும் பருக்கள் மற்றும் கரும்புள்ளிகளை அப்புறப்படுத்தும் சிகிச்சைகளை செய்து கொள்கின்றனர்.

அவற்றை அகற்ற பயன்படுத்தப்படும் ஊசிகள் கொதிக்கும் நீரில் இட்டு சுத்தப்படுத்தப்படுவதில்லை என்பதால், அவற்றின் ஊடாக நோய்கள் பரவும் ஆபத்து காணப்படுகிறது. இந்த ஊசிகள் மூலமாக பல்வேறு வகையான வைரஸ்கள் பரவக் கூடும். முகத்தில் உள்ள கரும்புள்ளிகளை சுத்தப்படுத்த அழகு நிலையங்களில் எம்லா என்ற மருந்து பயன்படுத்தப்படுகிறது. இந்த இரசாயனம் மருத்துவர்கள் பயன்படுத்தும் உடலை மரத்துப் போகச் செய்யும் இரசாயன மருந்தாகும்.

இதனை அழகு நிலையங்களில் பயன்படுத்துவது தவறானது. இப்படியான மருந்துகளை பயன்படுத்தும் போது ஏதேனும் அவசர நிலைமை ஏற்பட்டால், அவர்களிட கிச்சைகளை செய்வதற்கான முறை இல்லை. இதனால் உயிர் ஆபத்துக்கள் ஏற்படக் கூடும்.

மருத்துவமனைகளில் செய்யும் தசை பகுதிகளை சுடுவது, அறுவை சிகிச்சைகளை அழகு நிலையங்களில் செய்யக் கூடாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தவணைமுறை பொருட்கள் விற்பனைக்கு

# உத்தரவாதம் வழங்காமைக்கு நடவடிக்கை

## யாழ்.பாவனையாளர் அதிகார சபை அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் உள்ள இலத்திரனியல் பொருட்களை விற்பனை செய்யும் காட்சியறைகளில் தவணை முறையில் பொருட்களை விற்பனை செய்து விட்டு அவர்களுக்கு வழங்கவேண்டிய உத்தரவாதத்தை உரியமுறையில் வழங்காமை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.பாவனையாளர் அதிகார சபையின் அதிகாரி த.வசந்தசேகரன் தெரிவித்தார்.

ஒருவருட உத்தரவாதத்துடன தவணை முறையில் விற்கப்பட்ட ஒலிபெருக்கி சாதனம் பழுதடைந்து திருத்துவதற்காக அந்த விற்பனைக் காட்சியறையிடம் ஒப்படைத்து 8 மாத காலம் மீளவும் வழங்காமை குறித்து பாவனையாளர்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்து, இது குறித்து விசாரணை செய்தது டன் அந்த உத்தரவாதத்தை மீளவும் 8 மாத காலத்திற்கு நீடித்ததுடன், உரிய முறையில் ஒலிபெருக்கி சாதனத்தையும் பெற்றுக்கொடுத்துள்ளோம்.

இதேபோல 44 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி ஒன்றும் இவ்வாறு பழுதடைந்த நிலையில் பெற்ற கடை உரிமையாளர் மீதும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இது போன்ற உரியமுறையில் தவணைப் பணம் செலுத்தும் சரியான முறையில் பொருட் பயன்பாடும் கொண்ட பொருட் கொள்வனவில் ஏற்படும் சிக்கல்களை தாம் நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ,25)

# ஒஸ்மானியா கல்லூரிக்கு ஆளுநர் திடீர் விஜயம்

ஒஸ்மானியாக் கல்லூரியின் நிர்வாக நடைமுறை தொடர்பாக வடமாகாண ஆளுநருக்கு கிடைககப்பெற்ற புகார்களை அடுத்து நேற்று வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஒஸ்மானியாக் கல்லூரிக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

இவ்விஜயத்தின்போது அப்பாடசாலை நிர்வாகக் குறைபாடுகளை அவதானித்த நிலையில் அவற்றை ஒழுங்குபடுத்துமுகமாக சில ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வடமாகாண ஆளுநர் கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணித்துள்ளார்.

மேலும் பாடசாலை மாணவர்களுடன் கலந்தாலோசித்து தேவைகளைக் கேட்டறிந்த ஆளுநர் படிப்படியாக அவர்களது தேவைகளை பூர்த்தி செய்வதாகவும் இப்பாடசாலையில் குறித்த மாகாண ஒதுக்கீட்டு நிதியின் கீழ் கட்டட வேலைகளைத் துரிதப்படுத்துமாறும் பணித்துள்ளார்.

இச்சந்திப்பில் கல்வி உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மாநகர சபைக்கு தீயணைப்பு வாகனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்கு புதிய தீயணைப்பு வாகனம் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.


நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இவ்வாகனம் கையளிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

உள்ளூராட்சி அமைச்சர் அதாவுல்லாவினால் இவ்வாகனம் வழங்கி வைக்கப்படவுள்ளது. இதன் மூலம் யாழ்.நகரப்பகுதியில் ஏற்படக்கூடிய தீவிபத்துக்களை மிகவிரைவாக செயற்பட்டு பாதிப்புக்களை குறைக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (25)

# "மருத்துவ ஊடு கதிர்ப்படக்கருவி" புங்குடுதீவு வைத்தியசாலைக்கு அன்பளிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தை சேர்ந்த திரு.திருமதி கனகரத்தினம் கனகம்மா குடும்பத்தின் சார்பில் அவர்களின் இளையமகன் "அப்பன்" எனும் ரகுநாதன் மற்றும் அவரது பாரியார் உஷா ரகுநாதன் ஆகியோரினால் மருத்துவ ஊடு கதிர்ப்படக் கருவி (Scanning Machine) நன்கொடையாக புங்குடுதீவு வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.



புங்குடுதீவு வைத்தியசாலைக்கு நீண்டகாலமாக ஒரு "மருத்துவ ஊடு கதிர்ப்படக் கருவி அவசியத் தேவையாக விருப்பதாகவும் அதனைப் பெற்றுத் தருமாறும் புங்குடுதீவு வைத்தியசாலையின் வைத்தியர் சரவணபவன் சுவிஸ் புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம் உள்ளிட்ட ஏனைய நாடுகளிலுள்ள புங்குடுதீவு ஒன்றியங்கள் மற்றும் தனிப்பட்ட சிலரிடமும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இவ்விடயத்தினைக் கவனத்திற் கொண்ட புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு.திருமதி கனகரத்தினம் கனகம்மா குடும்பம் சார்பாக அவர்களின் பிள்ளைகளான சுவிஸ்லாந்தில் வசிக்கும் அருள், ரவி மற்றும் இலங்கையில் வசிக்கும் "அப்பன்" ஆகியோர் இணைந்து பத்தொன்பது இலட்சம் ரூபா பெறுமதியான "மருத்துவ ஊடு கதிர்ப்படக் கருவியினை வழங்கியுள்ளார்கள்.

இந்நிகழ்வில் உயிரியல் வைததியப் பொறியியலாளர் திருமதி சாந்தி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி குணதாசன் மகப்பேற்று வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி குமாரவேல் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவவியல் நிபுணர் வைத்திய கலாநிதி சரவணபவன் புங்குடுதீவு வைத்தியசாலையின் மருத்துவப் பொறுப்பதிகாரி மருத்துவ தலைமைத் தாதி மற்றும் தாதிமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (63, 48)

# "தெய்வீக சுகானுபவம்" யாழில் கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரகம், புதுடில்லியிலுள்ள கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேரவை, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம், இந்திய - இலங்கை அறக்கட்டளை மையம் மற்றும் வடக்கு மாகாண சபையின் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத துறை அமைச்சு என்பவற்றுடன் இணைந்து "தெய்வீக சுகானுபவம் - I, II" எனும் இரண்டு நாள் கலாசார விழாவை யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நடாத்தவுள்ளது.

பரத நாட்டியக் கலைஞர் லாவண்யா ஆனந்தும் பிரபல கர்நாடக இசைக் கலைஞர் ரி.வி.ராம்பிரசாத்தும் அரங்க ஆற்றுகை செய்வதோடு யாழ்ப்பாணத்திலுள்ள மாணவர்களுக்கும் இந்திய செவ்வியல் குரலிசையிலும் (கர்நாடக சங்கீதத்திலும்), நடனத்திலும் ஆர்வமுள்ளவர்களுக்கு பயிலரங்கையும் நடாத்துவர்.

இரண்டு பயிலரங்குகளிலும் வடமாகாணத்தின் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்களும், விரிவுரையாளர்களும் பங்குபற்றுவர்.

இரண்டு நாட்களும் முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம், நீராவியடி, இலங்கை வேந்தன் கலாமண்டபத்தில் பயிற்சிப்பட்டறை நடைபெறும். முதல் நாள் லாவண்யா ஆனந் பரத நாட்டியப் பயிற்சிப் பட்டறையையும், இரண்டாம் நாள் ரி.வி.ராம்பிரசாத் கர்நாடக சங்கீத பயிற்சிப் பட்டறையையும் நடாத்துவர்.(48)

# மதுபோதையில் வாகனம் ஓட்டிய சாரதிக்கு அபராதம் விதிப்பு

மதுபோதையில் கப் ரக வாகனத்தை செலுத்திச் சென்ற நபருக்கு 7,500 ரூபாய் தண்டம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வஹாப்தீன் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

மேலும், மேற்படி நபரது சாரதி அனுமதிப்பத்திரத்தை 6 மாதங்களுக்குத் தடை செய்யுமாறும் நீதவான் உத்தரவிட்டார். கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் வைத்து மேற்படி நபர் கடந்த ஜனவரி மாதம் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தவேளையில், மேற்படி நபர் மன்றில் சமூகமளிக்க முடியாததை நீதிமன்றுக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இதனையடுத்து. இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, மேற்படி நபர் மன்றில் ஆஜராகியிருந்தார். இதன்போது, நீதவான் மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

# ஏமாந்த திருடர்கள்

(யாழ்ப்பாணம்)

தாவடி வடக்கிலுள்ள வைத்தியர் ஒருவரின் வீட்டுக்குள் கடந்த திங்கட்கிழமை இரவு திருடர்கள் உட்புகுந்து அங்கிருந்த தாலிக் கொடி, சங்கிலி, காப்பு போன்ற பல நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டின் பின்பக்கக் கதவை உடைத்து உள்ளே நுழைந்து இந் நகைகளைத் திருடிச் சென்றனர்.


காலையில் எழுந்து பார்த்தபோது வீட்டுத் கதவுகள் திறந்திருப்பதையும், அலுமாரி உடைக்கப்பட்டு நகைகள் காணாமற் போயிருப்பதையும் அறிந்த உரிமையாளர்கள் இது தொடர்பில் பெரிதும் கவனம் செலுத்த வில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

காரணம் களவாடப்பட்ட நகைகள் அனைத்தும் போலியானவை என தெரிவிக்கப்படுகின்றது. (137)



**கொக்குவில் மேற்கு சனசமூக நிலையத்தில் "சுப்பிரமணியம் மாலதி" முன்பள்ளி மாண வர்களது மெய்வல்லுநர் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானத்திற்கு நிலைய உபதலைவர் செல்வி. பி.குணரத்தினம் மாலை அணிவித்து கௌரவிப்பதையும் முன்பள்ளி மாணவர்களின் விநோதஉடை நிகழ்வையும் காணலாம்.**

# சுகாதார தொழிற்சங்கங்களின் பிரச்சினைகளை தீர்க்க பணிப்புரை



சுகாதார தொழிற்சங்கங்களின் பிரச்சினைகளைத தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

சுகாதார ஒன்றிணைந்த தொழிற்சங்க பிரதிநிதிகளை ஜனாதிபதி நேற்று முன்தினம் அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடாத்தினார்

சுகாதார அமைச்சின் கீழ் வரும் 27 பிரிவுகளை உள்ளடக்கியதாக ஒன்றிணைந்த தொழிற் சங்கப் பிரதி நிதிகள் முன்வைத்த 5 கோரிக்கைகளைப் புரிசீலனை செய்த பின்னரே ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்தார்.

தீர்வுத் திட்டங்களை மூன்று மாத காலத்துக்குள் நடைமுறைப்படுத்துமாறும் ஜனாதிபதி உத்தரவிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, நிதியமைச்சின் செயலாளர் பி.பீ, ஜயசுந்தர, ஆகியோர் உட்பட சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# அனுமதிப்பத்திரமின்றி சேவையாற்றும் பேருந்துகளுக்கு எதிராக நடவடிக்கை

போக்குவரத்து அனுமதிப்பத்திரமின்றி பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளுக்கு எதிராக எதிர்வரும் மூன்று வாரங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இந்த நடவடிக்கைகளுக்காக பல குழுக்கள் நாடு பூராகவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ரேணுக பெரேரா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக யாழ்ப்பாணம் கொழும்பு, வவுனியா கொழும்பு ஆகிய மார்க்கங்களில், பயணிக்கும் பேருந்துகள், போக்குவரத்து அனுமதிப் பத்திரமின்றி பயணிக்கின்றமை குறித்து அதிகளவில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இந்த நடவடிக்கையை தவிர்க்கும் வகையில், தற்காலிக அனுமதிப் பத்திரம் வழங்கும் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

எனினும், வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரம் ஒருநாள் அனுமதிப் பத்திரத்தை வழங்க, கொழும்பு பெஸ்டியன் மாவத்தை பேருந்து தரிப்பிட முகாமையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தற்காலிக அடையாள அட்டைக்கு 26 ஆயிரம் விண்ணப்பங்கள்

ஊவா மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக தற்காலிக வாக்காளர் அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்காக, தமக்கு கிடைக்கப் பெற்ற 26,000 விண்ணப்பங்களில் 15,000 அடையாள அட்டைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ள அதேவேளை, ஏனைய விண்ணப்பங்களில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக அவற்றை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.எஸ். சரத்குமார தெரிவித்தார்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாராந்த ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

ஊவா மாகாகண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களில் கேட்கப்பட்டுள்ள விடயங்களுக்கு உரிய பதில்கள் வழங்கப்படாமை காரணமாக அந்த விண்ணப்பங்கள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுக்க முடியாதுள்ளதுடன் அவற்றில் சிலவற்றை நிராகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் தற்காலிக வாக்காளர் அடையாள அட்டையை வழங்குவதற்கான விண்ணப்பங்களைப் பெறுவதற்கு விஷேட நடமாடும் சேவையொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி 30 ஆம் திகதி வரை பதுளை மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகளினுடாக இந்த நடமாடும் சேவைகள் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

# ஜப்பானிய உதவி அமைச்சர் ஜனாதிபதியுடன் சந்திப்பு

ஜப்பானிய காணி, போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை உதவி அமைச்சர் மனபு சகைய் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தார்.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிட்டோ ஹொபொ வெளி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மக்கள் தொடர்பாடல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்லை, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஷேனுகா செனவிரத்ன மற்றும் ஜப்பானிய பிரதிநிதிகள் பலரும் இந்தச் சந்திப்பில் கலந்துக்கொண்டனர்.

கொழும்பு நகரில் மேற்கொள்ளப்படவுள்ள பாரிய போக்குவரத்து திட்டம் குறித்த அறிக்கையை ஜப்பானிய காணி போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை உதவி அமைச்சர் இச்சந்திப்பின் போது ஜனாதிபதியிடம் கையளித்தார்.

# சிறுவர் துஷ்பிரயோகங்களை கண்டறிய இணையத் தேடுதல் திட்டம்

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் கண்டறிய இணையத் தேடுதல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நிதியமைச்சு சட்டமா அதிபர் திணைக்களத்துக்காக இணையத்தள தேடுதல் திட்டம் ஒன்றை கொழும்பு பல்கலைக்கழக கணணிப் பாடசாலையின் உதவியுடனும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் நிதியுதவியுடனும் நேற்றுமுன்தினம் ஆரம்பிதுள்ளது.


இது தொடர்பில் இடம் பெற்ற ஆரம்ப நிகழ்வில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பங்கேற்று உரையாற்றினார்.

புதிய திட்டத்தின்மூலம் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்களை கண்டறியும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

தற்போது சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் பல வழக்குகள் கிடப்பில் உள்ளன. புதிய திட்டத்தின் கீழ் இவற்றை நிவர்த்திக்க முடியும் என்றும் ஹக்கீம் குறிப்பிட்டார்.

தன்னியக்க செயற்பாடுகள் இல்லாமையால் நீதியமைச்சின் நடவடிக்கைகளில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மிதக்கும் வர்த்தக சந்தை கொழும்பில் இன்று திறப்பு



கொழும்பு நகர நிர்மாண வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள மிதக்கும் வர்த்தக சந்தை மக்களின் பயன்பாட்டுக்காக இன்று திறந்து வைக்கப்படவுள்ளதாக காணி முகாமைத்துவ திட்ட அமுலாக்கல் சிரேஷ்ட ஆலோசகர் வீரசேன அதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து இச்சந்தையைத் திறந்துவைக்கவுள்ளனர்.

கொழும்பு ரயில் நிலையம் மற்றும் பஸ் நிலையம் அமைந்துள்ள பகுதியில் உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் பேரை வாவியில் இந்த மிதக்கும் சந்தை நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் கருத்திட்டத்திற்கு அமைய இராணுவம் மற்றும் கடற்படையினர் இணைந்து இந்த மிதக்கும் சந்தையை நிர்மாணித்துள்ளனர்.

92 விற்பனைக் கூடங்கள் இதில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 78 கூடங்கள் பெஸ்டியன் மாவத்தை மற்றும் ஒல்கொட் மாவத்தை நடை பாதைக் கடைகள் அகற்றப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பலஸ்தீன மக்களுக்கான உதவியை ஐ.தே.க.கண்டிப்பது வெறுக்கத்தக்கது

## அஸ்வர் எம்.பி. குற்றச்சாட்டு

அவதியுறும் பலஸ்தீன மக்களின் சார்பாக நிவாரணத்திற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வழங்கிய நிவாரண உதவிக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சி எதிர்ப்பு தெரிவித்துள்ளமை மிகவும் கணடிக்கத்தக்கதும் வெறுக்கத்தக்கதுமான விடயமாகும் என ஊடக தகவல்துறை அமைச்சின் மேற்பார்வை எம்.பி.யும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம்.அஸ்வர் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன நிவாரண உதவிக்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கியுள்ள ஒரு மில்லியன் டொலர் நிவாரண உதவிக்கு ஐ.தே.க. கட்சியின் தலைவரான ரணில் விக்கிரம சிங்க எதிர்ப்பு தெரிவித்துளளமைக்கு பதிலளிக்கும் வகையில் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வாக்குப்பெட்டிகளை தம்கட்சியின் சார்பாக நிரப்புவதற்கு மட்டும் அளுத்கம முஸ்லிம்கள் என்றும், பள்ளிவாசல்கள் என்றும் நாளும் பொழுதும் பிரசாரம் செய்யும் எதிர்கட்சித் தலைவரின் முஸ்லிம் விரோத சுயநலப்போக்கு இப்பொழுது அம்பலத்திற்கு வந்துள்ளது. "யங்கி டிக்கி" என்று அறிமுகமான ஐதேக தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் மாமனாரான ஜே.ஆர். ஜெயவர்தன ஏகாதிபத்திய அமெரிக்காவின் நண்பனாக ஆசியாவிலேயே இனங்காணப்பட்டவர் இவரின் மருமகன் ரணில் இன்று மாமனார் வழியிலேயே பலஸ்தீன மக்களுக்கு உதவிபுரிவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதில் எவ்வித வியப்பும் இல்லை.

ஒளித்தொளித்திருந்து எவ்வளவு "மேக்கப்" போட்டாலும் ஒளித்திரையில் தோன்றும் போது உண்மை தோற்றம் அம்பலமாகும்! அன்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ச பலஸ்தீனத்திற்கு ஆதரவு தெரிவித்து ஒரு பிரேரணை கொண்டு வந்தபோது அதற்கு சார்பாக பேசுவதற்கு முன்னாள் ஊடக அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மார்க்கார் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சராக இருந்த எனக்கும் வாய்ப்பூட்டு போட்டவர் அன்று பிரதமராக இருந்த இதே ஐ.தே.க. தலைவர் தான் என்று முஸ்லிம்கள் நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். நான் அண்மையில் காஸாவில் நடக்கும் இஸ்ரேல் சயோனிஸ தாக்குதலை எதிர்த்து நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்பு நேரத்தில் பிரேரணை கொண்டு வந்தபோது அதற்கு சார்பாக ஒரு வார்த்தையேனும் பேசாது எதிர்க்கட்சித் தலைவரும் அவரின் ஏனைய உறுப்பினர்களும் சபையிலிருந்து மாயமாய் மறைந்து விட்டதையும் முஸ்லிம்களுக்கு சுட்டிக்காட்டுவது எனது கடமையாகும் என்றார்.

# எதிர்ப்பு அரசியல் மூலமாக எதனையும் பெறமுடியாது

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உலக நாடுகளின் இன்றைய கால உறவுகளில் தற்போது பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பிராந்திய வல்லரசு பரிணாமப் போட்டிகளால் ஒவ்வொரு அண்டை நாடுகளும் இலங்கையுடன் இணைந்து செயற்படவே முயற்சிக்கின்றனர். அந்த அதிகாரப் போட்டியின் மையத்தில் சுழற்றப்படுபவர்களாக மறுபடியும் தமிழர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தூக்கி நிறுத்த முற்படுகின்றனர் 'என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை தொல்புரம் பத்தானைக்கேணி பகுதி மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இன்று எஞ்சியுள்ள இளைஞர்களையும் அழிக்கும் நோக்குடன் மறுபடியும் உலக நாடுகளிலுள்ள ஒருசில தமிழர்களது சுயநலத்திற்காக அரச எதிர்ப்பு செயற்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செய்து வருகின்றனர்.

இவ்வாறான தவறான சுயநலம் கலந்த அரசியல் நகர்வுகளால் சாதாரண பொதுமக்களை பகடைக்காய்களாக்கி மீண்டும் தமது குடும்ப சுயநல அரசியலை கூட்டமைப்பினர் தக்கவைப்பதற்கு போராடிக் கொண்டிருக்கின்றனர். இதனை ஒவ்வொருதமிழனும் புரிந்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

எதிர்ப்பு அரசியலால் மக்கள் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தேர்ந்தெடுத்துள்ள இணக்க அரசியலே தற்போதுள்ள அரசியல் நீரோட்டத்திற்கு பொருத்தமாக உள்ளது. உண்மை நிலைமைகளை மக்களுக்கு தெரியப்படுத்துவது தற்போதைய தேவையாக உள்ளது.



இந்தச் சந்திப்பில் ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் மேற்கு அமைபாளர் ஜீவன், பிரதேச சபை உறுப்பினர் செல்வக்குமார், கட்சி உறுப்பினர் மூர்த்தி, ஆகியோருடன் அப்பகுதி மக்களும் கலந்துகொண்டனர்.

## முரசின் இன்றைய பலன்



(22.08.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் ஆவணி மாதம் 06 ஆம் திகதி.
பிரதோஷ விரதம். துவாதசி திதி / சித்தயோகம்.
பூனர்பூச நட்சத்திரம் மு.இ. 11.40 வரை. பின் பூசம்.
இராகு காலம 10.35 - 12.05 வரை. சுபநேரம 06.05 - 07.35 வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | உரியவேளைக்கு வீடுவந்து சேர்ந்ததினால் திருடரின் முயற்சி பலிக்காது விடல், ''கைபேசி'' பேச்சில் மெய்மறந்து பயணித்தவேளையில் விபத்து ஏற்படல். |
| ரிஷபம் | மருந்து விசிறப்பட்ட மீன்கள் விற்பனைக்காக வைத்திருந்தவேளை அழிக்கப்படல், விளம்பரப்படுத்தப்பட்ட வேலை வாய்ப்புக்கு விண்ணப்பம் செய்ய விழைதல். |
| மிதுனம் | நிறைவேறும் நிலையில் இருந்த விவாகம் பேதம் காரணமாக ஸ்தம்பித்தல், நீண்ட நாட்களாக சோகத்தினால் கலகலப்பைத் தொலைத்திருந்த வீட்டில் மகிழ்ச்சி நிலவுதல். |
| கடகம் | அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற வாகனம் கைப்பற்றப்பட்டு வழக்குத் தாக்கல் செய்தல், மாணவர் விசா கிட்டுவதினால் வெளியூர் சென்று கல்விகற்க பிரயாணமாதல். |
| சிம்மம் | தொடர்ந்து நோய்வாய்ப்படும் பிள்ளையை விற்று வாங்கும் முயற்சியில் ஈடுபடல், மதுபோதையில் உரிய வாகன அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தைச் செலுத்தியவர் கைதாகல். |
| கன்னி | முறைதவறிய மீன்பிடியில் ஈடுபட்டமையினால் உபகரணங்கள் பறிமுதலாக்கப்படல், சுகாதார சீர் கேடுகள் இன்மையால் உணவுச்சாலைக்கு பாராட்டுப்பத்திரம் வழங்குதல். |
| துலாம் | மனையின்மையினால் விவாகம் இழுபட்டு செல்வதினால் கவலை ஏற்படல், பாவனைக்குதவாத உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டம் வழங்குதல். |
| விருச்சிகம் | செய்தொழிலில் அலட்சிய மனப்பாங்கு இருந்தமையினால் நஷ்ட நிலைக்கு வருதல், பிதா மற்றும் மூத்த சகோதரங்கள் உதவமுன்வந்ததினால் கடன் அடைபடுதல். |
| தனுசு | மிகுதிப்பணம் பெறசில்லறைத்தட்டுப்பாட்டினால் ரகளை ஏற்படல், அலறும் ஒலி பெருக்கியினால் கிரகித்துப் பழக்க முடியாது மாணவர்கள் திண்டாடுதல். |
| மகரம் | வெளிநாட்டு மணமகனை அடையும் நோக்கில் பிறநாட்டு மொழிகள் கற்கச்செல்லல், கட்டிய இன் சூரன்ஸ் பணத்தில் மோசடி ஏற்படுத்திய நபரை தேடி அலைதல். |
| கும்பம் | மின்சாரம் சதி செய்ததினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் குழப்பநிலை தக்க வைத்தல், கைபேசியில் ஆபாசப்படங்களை வைத்திருந்தவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் தண்டம் வழங்குதல். |
| மீனம் | நீண்ட காலமாக புத்திர பிராப்தி அற்ற நிலையில் தத்தெடுக்க விழைதல், பயிர்பச்சைகளை சேதப்படுத்திய கால் நடைகளினால் அயலவருடன் முரண்பாடு ஏற்படல். |

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று....

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் மாம்பழத்திருவிழாவான இன்று இந்து மதம் காட்டும் சைவப்புலவர் ச.நவநீதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். தொடர்ந்து நாவற்குழி அறிவொளிமன்ற அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து மாதகல் சித்தி விநாயகர், தெல்லிப்பளை கன்னி வளவுப் பிள்ளையார், பன்னாலை முத்துமாரி அம்பாள் ஆகிய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

◆ ◆ ◆

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 மணி முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.


இதில் மாம்பழத்திருவிழாவான இன்று திருமதி தாரணி ராஜ்குமார் வழங்கும் பாட்டு இசையரங்கம் பக்கவாத்திய சகிதம் இடம்பெறவுள்ளது. (42)

## சுகாதார செயற்பாடு

சர்வதேச தாய்ப்பாலூட்டும் வார நிகழ்வு கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

வடமாகாண சர்வோதய இயக்கத்தின் நிதி அனுசரணையில் நடாத்தப்பட்ட நிகழ்வில் மருத்துவ மாதுக்களால தாய்ப்பாலூட்டலின முக்கியத்துவம் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. (90)

## நல்லைக் கந்தனுக்கு இன்று மாம்பழத் திருவிழா



### சரவணபொய்கையில் உதித்தவனே!

நோக்கால் முப்புரமெரித்தோன்
நேத்திரம் தோற்றிய விமலா
நோக்கினால் நோக்கும் நோக்(ற்)காத
போதும் நோக்கும் நினையவே
சரவணபொய்கை வந்து தவழ்ந்தவா
கமல மலர் அமர்ந்த கடவுளே
கார்த்திகை கன்னியர் நெஞ்ச மர்ந்தவா
ஞானப்பால் உண்டவா கொஞ்சும் தமிழ் தா!

மண்டைதீவு மகிழ்நன்-

### அருள்பொங்கும் நல்லூரிலே!

சங்கத் தமிழ்மூன்றும் நல்லையிலே சொரியட்டும்
மங்களமாய் வேலனவன் மயில்மீது ஏறட்டும்
தங்க வேலுமவன் கரங்களிலே தவழட்டும்
துங்கக் கரிமுகனும் துணைக்கங்கே செல்லட்டும்
எங்கெங்கும் பக்தர்கள் பரவசத்தால் ஆடட்டும்
பொங்கும் கடலெனவே அருள்பொங்கி வழியட்டும்
மங்கும் பொழுதவனால் மறைந்து ஒளி பரவட்டும்
சங்கொலியும் விண்முட்டை முட்டிஒலி செய்யட்டும்.
பங்கமேதும் இல்லாத பஜனைகளும் நடக்கட்டும்
அங்கமலாம் அவனருளே தவழ்ந்து விளையாடட்டும்
திங்களொளி நிகர்வேலால் திகைத்துமே நிற்கட்டும்
எங்குமவன் ஏறுமயில் ஏறிவிளையாடட்டும்
இங்கிதமாய் இதயமெலாம் இளஞ்சுடர்கள் பரவட்டும்
குங்குலியம் சொரிந்துள்ள அழுக்கெல்லாம் அகலட்டும்
சங்கிலியம் மீண்டுமிந்த நல்லூரில் சிறக்கட்டும்
கங்கைமகன் திருவருளால் கருணைமழை பொழியட்டும்.

-ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் மூளாய்-

### கந்தன் எமக்கு காவலன்!

யாழ்ப்பாண மக்கள் யாவருமுன் சேவடியைச்
சூழ்கின்றார் அச்சந் தொனிக்காமல் - வாழ்வருளி
கந்தா கடம்பா கதிர்காமா நல்லூரா
சிந்தா குலந்தீரச் செய்

விரக்தி இனியின்றி வீண்பேச்சு மின்றி
உரத்தோ டுயிர்வாழ் மக்கள் - சிரத்தையுடன்
தேவர்சிறை மீட்ட செவ்வேளே நல்லூரின்
காவலனே கார்க்கக் கடன்.

-நல்லூர்கந்தன் பாமாலை-

### பாவங்கள் போய்விடும்

முருகனே முத்துக்குமரனே நல்லை நகர்க்கந்தனே
திருநாமம் சொன்னாலே போய்விடும் நம் பாவங்களே
வருவாய் நீ மயில் மீது கன்னி வள்ளியின் மணாளனே
உருகா நெஞ்சமும் உருக நீ நல்லூரில் காட்சி தாராய்!

-கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்-

### வீழ்ந்து கும்பிடுவோம்!

நேரமுகாமைத்துவம் நீ படிப்பதென்றால்
நேராக நல்லூருக்கு வந்து படி புரியும்,
வீரம், பேரம், பட்டம், பதவியுனைச் சூழ்ந்ததால்
விழுந்து கும்பிடு, விலகிப் போகும் பார்!

-கே.எஸ்.சிவஞானராஜா கொக்குவில்-

# ஆஸியிலும் இந்தியாவுக்கு தோல்வி நிச்சயம்



(சிட்னி)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரிலும் இந்திய அணி படுதோல்வியைச் சந்திக்கும் என நம்புகின்றேன். என்னைப் பொறுத்த வரை இந்தக் கணிப்பு தவறாக இருக்காது என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரில் படுதோல்வியடைந்த இந்திய அணி அடுத்து அவுஸ்ரேலிய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் பங்குபற்ற வுள்ளது. இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மெக்ராத் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு இங்கிலாந்து அணி அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆஷஸ் டெஸ்ட் தொடரில் ஆடிய போது, 0-5 என்ற கணக்கில் படுதோல்வியைச் சந்தித்தது. எங்களிடம் தோல்வி கண்ட இங்கிலாந்து அணி தற்போதைய தொடரில் சிறப்பாக விளையாடி இந்தியாவை 3-1 என்ற கணக்கில் வீழ்த்தியிருக்கிறது. எனவே இந்திய அணிக்கு அவுஸ்ரேலிய தொடர் மிகவும் கடினமாக இருக்கப்போகிறது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அவுஸ்ரேலிய அணி, உலகில் எங்கு விளையாடினாலும், தங்களது முழுத்திறமையை கணிசமாக வெளிப்படுத்தினாலே அவர்களை வீழ்த்துவது என்பது உண்மையிலேயே கடினமான காரியம். வெளிப்படையாக சொல்ல வேண்டும் என்றால், அவுஸ்ரேலிய மண்ணில் இந்திய அணி எந்த ஒரு டெஸ்டிலும் வெற்றி பெறும் என்று நான் நினைக்கவில்லை. எனது கணிப்பு அவுஸ்ரேலியா வெல்லும். தொடரை 4-0 என்ற கணக்கில் கைப்பற்றும் என்பது தான்.

எனது கணிப்பு தவறு என்பதை நிரூபிக்க வேண்டியது இந்திய அணியைப் பொறுத்தது. மீண்டும் பழைய நிலைமைக்கு திரும்புவதற்கான வழி-முறைகளை இந்திய வீரர்கள் கண்டறிய வேண்டும். இந்திய அணி களத்தடுப்பு, துடுப்பாட்டம், பந்து வீச்சு ஆகியவற்றில் அதிகமான முன்னேற்றம் காண வேண்டியது அவசியம். அடுத்த சில மாதங்களில் இதற்காக கடுமையாக உழைக்க வேண்டும். இவற்றில் முன்னேற்றம் ஏதும் ஏற்படாவிட்டால், எனது கணிப்பு மாறாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# நீக்கத்தால் விரக்தி

(லண்டன்)

இந்திய அணியுடனான ஒரு நாள் தொடரில் என்னைப் புறக்கணித்தமை வேதனை அளிக்கும் ஒரு விடயமாக, உள்ள அதேவேளை, இது மேலும் சாதிக்க வேண்டும் என்ற உந்துதலை எனக்குள் ஏற்படுத்தியுள்ளது என இங்கிலாந்து அணியின் ரவி போபரா தெரிவித்துள்ளார்.

நான் அணியில் இணைக்கப்படவில்லை என்பது மிகப்பெரியளவில் அதிர்ச்சியை தந்தது. சாதரணமாக, தெரிவுக்குழுவில் இருந்து அழைப்பு வந்தால் போட்டிக்குத் தயாராகுங்கள் என்ற அறிவித்தல் வரும். ஆனாலும் இந்தமுறை அழைப்பில் மன்னிக்கவும் என்ற செய்தி வந்தது. எனக்கு இது எப்போதும் இல்லாதவாறு அதிர்ச்சியைத் தந்தது.

ஆனால்,. அணியில் என்னை இணைக்காமல் விட்டதன் மூலம் என்னை மேலும் போராட வைத்துள்ளனர். இந்த விடயம் எனக்கு மேலதிக உந்துதலை வழங்கியுள்ளது. போராடி என்னுடைய திறமைகளை மேலும் காட்டி தெரிவுக்குழுவும், தலைவரும் தாங்கள் எடுத்த முடிவு பிழை என உணர வைப்பேன்.

எதிர்வரும் உலகக்கிண்ண அணியில் நான் இடம் பிடிப்பேன். இந்த தொடருக்கு பின்னர் இலங்கை அணியுடன் 7 ஒருநாள் போட்டிகளிலும், இந்தியா, அவுஸ்ரேலியா அணிகளுடனான முக்கோண ஒருநாள் போட்டித் தொடரிலும் அணியில் இடம்பிடித்து சிறப்பாக விளையாடுவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியுடன் நிறைவடைந்த ஒருநாள் போட்டித் தொடரில், ரவி போபரா 5 போட்டிகளில் 71 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தார். ஒரு போட்டியில் அரைச் சதத்தை பெற்றுக் கொண்டார். பந்துவீச்சில் 1 விக்கெட்டை மாத்திரமே கைப்பற்றியிருந்தார். இந்த வருடத்தில் விளையாடிய 13 போட்டிகளில் 220 ஓட்டங்களைப் பெற்றதோடு 7 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார்.

# மே. தீவுகள் வெற்றி



(கிரீனிடா)

பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி ஏழு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

பங்களாதேஷ், மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் நேற்று முன்தினம் மேற்கிந்தியத்தீவின் கீரினிடாவின் செயிண்ட் ஜோர்ஜ் மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அனாமுல் ஹக் 109 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிராவோ நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 218 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 39.4 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் போலாட் 70 பந்துகளை எதிர் கொண்டு ஆறு சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 89, ராம்டீன் 74 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக போலாட் தெரிவு செய்யப்பட்டார்.

## மே.தீவுகளின் பயிற்றுநர் விலகல்

மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ஓட்டிஸ் ஜிப்சன் திடீரென விலகியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள்-பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான தொடருக்கு முன்னதாக அவர் விலகியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதுதொடர்பாக அந்நாட்டு கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், இரு தரப்பும் பரஸ்பர சம்மதத்துடன் ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டுள்ளோம் என குறிப்பிட்டுள்ளது.

ஜிப்சனின் விலகலைத் தொடர்ந்து மேற்கிந்தியத்தீவுகள் அணியின் மேலாளர் ரிச்சி ரிச்சர்ட்சன் இடைக்கால பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். பங்களாதேஷ் அணிக்கு எதிரான கிரிக்கெட் தொடர் முடியும் வரை அவரே பயிற்சியாளராக இருப்பார்.

இதேவேளை, பயிற்றுநர் பதவியிலிருந்து விலகுவது குறித்து ஓட்டிஸ் ஜிப்சன் எதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை.

# நட்சத்திரங்களின் பிரவேசம்




(பார்சிலோனா)

உலகக் கிண்ணக் கால்பந்து போட்டியில் மறக்க முடியாத வெளியேற்றத்திற்கு பின் முதல்முறையாக பார்சிலோனாவில் நடைபெற்ற உள்ளூர் லீக் போட்டியில் உருகுவே வீரர் லூயிஸ் சுவாரெஸ் மற்றும் பிரேசில் நட்சத்திர வீரர் நெய்மர் ஆகியோர் களமிறங்கினர்.

உலகக் கிண்ணப் போட்டியில் லூயிஸ் சுவாரெஸ் இத்தாலி வீரர் ஜியார்ஜியோ செலினியை தோள்பட்டையில் கடித்தற்காக அவருக்கு 4 மாதம் தடை விதிக்கப்பட்டது. அதேபோல் நெய்மர் கடந்த யூலை 4 ஆம் திகதி ஏற்பட்ட காயத்திற்கு பின்னர் எந்தப் போட்டியிலும் விளையாடவில்லை.

இந்நிலையில் இதுவரை லிவர்பூல் அணிக்கு விளையாடி வந்த சுவாரெஸ் தற்போது பார்சிலொனா அணிக்காக விளையாடுகிறார். புதிய அணிக்கு வருகை தந்த நெய்மர் மற்றும் சுவாரெசுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

# ஒலிம்பிக் வீரர்களுக்கு சிறை

(லாகூர்)

பாகிஸ்தானில் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக ஒலிம்பிக்கில் விளையாடிய முன்னாள் ஹொக்கி வீரர்கள் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் ஹமர் இப்ரா ஹிம், முகமது இர்.்பான், கம்ரன் அஷ்ரப் ஆகியோர் தேசிய சிரேஷ்ட ஹொக்கி அணியின் பயிற்சியாளர்கள். டேனிஷ் கலீம், அஞ்ஜீம் சயீத், சொஹைல் அஷ்ரப் ஆகியோர் பாகிஸ்தானுக்காக ஒலிம்பிக்கில் ஹொக்கி விளையாடியவர்கள்.

இவர்களுடன் பெண் ஒருவரும் இருந்துள்ளார். இவர்கள் 8 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களின் குற்றம் உறுதிப்படுத்தப்பட்டால் கடும் தண்டனை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

## தோழிக்கு அனுமதி ஹோலி மீது சர்ச்சை

ஹோலியுடன் அனுஷ்கா தங்கிக் கொள்ள சிறப்பு அனுமதி கொடுத்தது தொடர்பாக சர்ச்சை கிளம்பியுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சொதப்பிய இந்திய வீரர் ஹோலி, 5 டெஸ்டில், 134 ஓட்டங்கள் தான் எடுத்தார். இவரும் பொலிவுட் நடிகை அனுஷ்கா சர்மாவும் நண்பர்களாக உள்ளனர். இருவரும் அடிக்கடி சந்தித்து கொள்வது வழக்கம். இது இங்கிலாந்து தொடரிலும் தொடர்கிறது.

இந்திய வீரர்களுடன் அவர்களது மனைவியர் மட்டுமே உடன் செல்ல அனுமதி உள்ளது. ஆனால், துணைக் கப்டன் ஹோலி, தனது தோழி அனுஷ்காவை தங்க வைத்துக் கொள்ள இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) செயலர் சஞ்சய் பட்டேலிடம் அனுமதி கேட்டுள்ளார்.

டெஸ்ட் தொடரின் ஆரம்பத்தில் திணறிய இவருக்கு, ஆறுதலாக இருக்கட்டும் என்று, நினைத்த சஞ்சய் பட்டேல், இந்திய அணி நிர்வாகத்தை தொடர்பு கொண்டார். ஹோலி கோரிக்கையில் தவறு இல்லை, இதை ஏற்க வேண்டும் எனத் தெரிவித்தாராம்.

இது குறித்து பி.சி.சி.ஐ., நிர்வாகி ஒருவர் கூறுகையில், இந்திய அணியின் தோல்வி தொடர்பாக முகாமையாளர் சுனில் தேவ் அறிக்கை தாக்கல் செய்யவுள்ளார். இதில், ஹோலி அனுஷ்கா விவகாரத்தையும் சேர்க்க வேண்டும். ஹோலிக்கு சலுகை எதுவும் காட்டக் கூடாது என்றார்.

இதேவேளை, ஹோலிக்கு சலுகை எதுவும் காட்டக்கூடாது என்ற வாதம் தவறானது ஏனெனில் அனுமதி கொடுக்க முதல் இது குறித்து ஆளமாகச் சிந்தித்திருக்க வேண்டும். இந்த விடயம் குறித்து அதிகம் கதைப்பது பொருத்தமற்றது என இந்திய அணியின் முன்னாள் வீரர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

## கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு விழா

# கிண்ணம் வென்றது கரைச்சிப் பிரதேசம்







(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு விழாவின் வெற்றிக் கிண்ணத்தை கரைச்சிப் பிரதேச செயலகம் கைப்பற்றிக் கொண்டது.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு விழா கடந்த 17ஆம் திகதி கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்றது. இதில் தடகளம் மற்றும் வினோத உடைப் போட்டி போன்ற பல நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில் கரைச்சி, கண்டாவளை, பச்சிளைப்பளை, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிக்கொணர்ந்தனர். ஒட்டுமொத்தப் புள்ளிகள் அடிப்படையில் கரைச்சிப் பிரதேசப் செயலகம் 138 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், பூநகரி பிரதேச செயலகம் 55 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், 34 புள்ளிகளைப் பெற்ற பச்சிளைப்பளை பிரதேச செயலகம் மூன்றாமிடத்தையும், 28 புள்ளிகளைப் பெற்ற கண்டாவளைப் பிரதேச செயலகம் நான்காமிடத்தையும் பிடித்துக் கொண்டது.

இப்போட்டியின் சிறந்த தட வீரர், கள வீரர் மற்றும் சிறந்த தடகள வீரராக கரைச்சிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். கமல்ராஜ், சிறந்த தட வீராங்கனையாக கரைச்சிப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே. சகீதா, சிறந்த கள வீராங்கனையாக பவித்திரா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். இப்போட்டி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி சதானந்தம், பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர்கள், விளையாட்டுக்கழகங்களைச் சேர்ந்த தலைவர், செயலாளர்கள், விளையாட்டு வீர,வீராங்கனைகள், விளையாட்டு நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (93)



### ஒரே பார்வையில் பெருவிளையாட்டு

**கால்பந்து பெண்கள்**
1) பூநகரி பிரதேச செயலகம்
2) கரைச்சிப் பிரதேச செயலகம்

**கால்பந்து ஆண்கள்**
1) பூநகரி பிரதேச செயலகம்
2) கரைச்சிப் பிரதேச செயலகம்

**எல்லே பெண்கள்**
1) கரைச்சிப் பிரதேச செயலகம்
2) கண்டாவளைப் பிரதேச செயலகம்

**எல்லே ஆண்கள்**
1) கரைச்சிப் பிரதேச செயகலம்
2) பூநகரிப் பிரதேச செயலகம்

**மென்பந்து கிரிக்கெட் பெண்கள்**
1) கரைச்சிப் பிரதேச செயலகம்
2) பூநகரிப் பிரதேச செயலகம்

**மென்பந்து கிரிக்கெட் ஆண்கள்**
1) கரைச்சிப் பிரதேச செயலகம்
2) பூநகரி பிரதேச செயலகம்

**கபடி ஆண்கள்**
1) கரைச்சிப் பிரதேச செயலகம்
2) பூநகரிப் பிரதேச செயலகம்

**கபடி பெண்கள்:**
1) கரைச்சிப் பிரதேச செயலகம்
2) கண்டாவளைப் பிரதேச செயலகம்

**வலைப்பந்து:**
1) கரைச்சிப் பிரதேச செயலகம்
2) பச்சிளைப்பள்ளி பிரதேச செயலகம்

**கரப்பந்து ஆண்கள்:**
1) கரைச்சிப் பிரதேச செயலகம்
2) பூநகரிப் பிரதேச செயலகம்

**கரப்பந்து பெண்கள்:**
1) பச்சிலைப்பளை பிரதேச செயலகம்
2) கரைச்சிப் பிரதேச செயலகம்

**கடற்கரை கரப்பந்து ஆண்கள்**
1) கரைச்சிப் பிரதேச செயலகம்
2) பச்சிலைப்பளை பிரதேச செயலகம்

**கடற்கரை கரப்பந்து பெண்கள்:**
1) பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம்
2) கரைச்சிப் பிரதேச செயலகம்

விளையாட்டு செய்திகள்

## இன்றைய ஆட்டம்

(கைதடி)

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆகிய வங்கிகளின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடாத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டம் இன்று கைதடி விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் அணியும் தாவடி காளியம்பாள் அணியும் மோதவுள்ளன. இரு அணிகளுமே பலம் வாய்ந்தவை என்பதால் இப்போட்டி விறுவிறுப்பு மிக்கதாக நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நாளை நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மயிலிட்டி வள்ளுவர் அணியும், உடுவில் ஆலடி சிந்து அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் அடுத்த மாதம் 7ஆம் திகதி நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## தேசிய மட்ட சூப்பர் குறூப் கிரிக்கெட் தொடர்

# யாழ். மத்தி, சென். ஜோண்ஸ், கொக்குவில் இந்து தகுதி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் சூப்பர் குறூப் கிரிக்கெட் தொடரை விரைவில் நடாத்தவுள்ளது. இலங்கைப் பாடசாலை கிரிக்கெட் சங்கம் பிரிவு ஒன்று, இரண்டு, மூன்று என மூன்று பிரிவுகளில் பாடசாலை அணிகளுக்கிடையில் கிரிக்கெட் போட்டிகளை நடாத்தி வருகின்றது.

இந்நிலையில் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் சூப்பர் குறூப் சுற்றுப் போட்டி முதன் முறையாக நடாத்தவுள்ளது. 19 வயதுப் பிரிவு மூன்றில் 200இற்கும் மேற்பட்ட பாடசாலை அணிகள் பங்குபற்றி வருகின்றன. இதில் 39 பாடசாலை அணிகள் தெரிவு செய்யப்பட்டு சூப்பர் குறூப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் வடக்கு மாகாணம் சார்பாக சென் ஜோண்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகள் தகுதி பெற்றுள்ளன.

இப்போட்டித் தொடருக்கான போட்டி நிரல் இடப்பட்டுள்ளதாகவும் இப்போட்டித் தொடர் அடுத்த மாதம் முற்பகுதியில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் முதல் சுற்று ஆட்டங்கள் இரு நாட் களைக் கொண்டதாகவும், இரண்டாவது சுற்றுக்கள் 50 ஓவர்களைக் கொண்டதாகவும் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

## கம்பர்மலை யங்கமன்ஸ் முன்னேற்றம்

(வடமராட்சி)

உதயசூரியன் அணிக்கெதிரான போட்டியில் கம்பர்மலை யங்கமன்ஸ் அணி அபார வெற்றிபெற்றது. பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வடமராட்சி கிழக்கு உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் அணிக்கு ஒன்பது பேர் கொண்ட மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் வடமராட்சி கிழக்கு - வத்திராயன் உதயசூரியன் அணியும், கம்பர்மலை யங்கமன்ஸ் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி கோல் மழை பொழிந்து முன்னிலை பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் உதயசூரியன் அணி செயற்பட்டபோதிலும் யங்கமன்ஸ் அணியின் பிற்கள வீரர்களின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் முறியடிக்கப்பட்டது. இறுதியில் யங்கமன்ஸ் அணி 4-1 என்ற கோல் கணககில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. (48)

## ஒரு நாள் தொடர் நாளை ஆரம்பம்

(அம்பாந்தோட்டை)

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் நாளை கா்லை 10 மணிக்கு அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது. டெஸ்ட் தொடரை வென்றது போன்று ஒரு நாள் தொடரையும் கைப்பற்றுவோம். எங்கள் அணியில் சிறந்த வீரர்கள் இருப்பது மிகுந்த மகிழ்ச்சி. பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர்கள் அச்சுறுத்தல் மிக்கவர்கள் என்பது எங்களுக்கும் தெரியும் என இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

# அமிர்தலிங்கம் படுகொலைக்கு பிறகு...

**- டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.**

**3**

இதற்கிடையில் அமிர்தலிங்கம் கொலைப் பழியில் இருந்து எல்.ரீ.ரீ.ஈயினை விடுவிப்பதற்காக தனது முயற்சிகளை அரசாங்கம் தொடர்ந்து கொண்டிருந்தது. முன்னாள் சண்டே ரைம்ஸ் ஆசிரியர் றீற்றா செபஸ்டியன், ஒக்ரோபர் 1989இல் ரஞ்சன் விஜேரட்னவினால்



நடத்தப்பட்ட செய்தியாளர் கூட்டத்தில் ஒரு திடுக்கிடும் தகவலை வெளிக்கொணர்ந்தார்.

மட்டக்களப்பில் உள்ள புலிகள் முகாம் ஒன்றில் இறந்த புலி அங்கத்தினர்களின் படங்களை காட்சிக்கு வைத்திருக்கும் இடத்தில் தான் விசு, அலோசியஸ் மற்றும் சிவகுமார் ஆகியோரின் படங்களைக் கண்டதாக அவர் தெரிவித்தார். இதன் கருத்து அந்தக் கொலைகளுக்கு எல்.ரீ.ரீ.ஈதான் பொறுப்பு என்றுதானே ஆகிறது என்று றீற்றா, ரஞ்சன் விஜேரட்னவிடம் கேட்டார்.

அதைக்கேட்டதும் தனது சுங்கானை உறிஞ்சிய ரஞ்சன் விஜேரட்ன குறும்பாக சிரித்தபடி தான் அதை எல்.ரீ.ரீ.ஈயின் யோகியுடன் கேட்டு உறுதி செய்வதாகப் பதிலளித்தார். அதை அவர் ஒருபோதும் செய்யவில்லை!

அந்தப் பழியை எல்.ரீ.ரீ.ஈ மீதிருந்து துடைத்தெறிய தன்னால் முடிந்தளவு அரசாங்கம் பாடுபட்டாலும் கூட நிகழ்வுகள் அதை முறியடிக்க ஆரம்பித்ததின் விளைவாக எல்.ரீ.ரீ.ஈ உத்தியோகபூர்வமாக அந்தக் கொலைப் பழியை ஏற்றுக் கொள்ள வேண்டியதாகிவிட்டது. இது அரசாங்கத்தை ஒரு விரும்பத்தகாத சூழ்நிலைக்குத் தள்ளிவிட்டது.

எல்.ரீ.ரீ.ஈ மரணங்களுக்கு உரிமை கோராமல் இருப்பதும், விசு வெளியேற்றப் பட்டுவிட்டார் என மறுதலிப்பு செய்ததும், அவரது குடும்ப அங்கத்தவர்கள் சிலருக்கு கவலையையும் கோபத்தையும் ஏற்படுத்தியது. விசுவின் இயற்பெயர் இராசையா அரவிந்தரம். இவர் எல்.ரீ.ரீ.ஈ துணைத் தலைவர் மாத்தையா என்கிற மகேந்திரராஜாவுடன் மிகவும் நெருக்கமாக இருந்தார். மாத்தையாவால் உருவாக்கப்பட்ட உளவுப் பிரிவான பீற்றா - 2இக்கு தலைமையேற்றிருந்தார்.

மாத்தையாவும் விசுவும் மிகவும் நெருக்கமாக இருந்தபடியால் விசுவின் அநேக குடும்ப அங்கத்தவர்களும் புலிகளின் துணைத் தலைவருக்கு மிகவும் அறிமுகமானவர்களாக இருந்தார்கள்.

விசு என்கிற அரவிந்தரம் யாழ்ப்பாணம் வடமராட்சி பகுதியின் வதிரியில் உள்ள உயர் நடுத்தரக் குடும்பத்திலிருந்து வந்தவர். அவரது தந்தை ஒரு மருத்துவ பயிற்சியாளர். விசுவின் மூத்த சகோதரி ஒரு மருத்துவரை மணம் செய்து இப்போது வட அமெரிக்காவில் வசிக்கிறார். ஒரு மூத்த சகோதரர் புத்தளத்தில் வங்கி முகாமையாளராக உள்ளார்.

விசுவுக்கு முகுந்த் மற்றும் முரளி என்கிற இரண்டு இளைய சகோதரர்களும் உள்ளனர். இதில் முன்னவர் ஜேர்மனியிலும் பின்னவர் பிரித்தானியாவிலும் வசிக்கிறார்கள். விசு நெல்லியடி மத்திய கல்லூரியில் படித்தவர். 1977 தேர்தல்களில் அவர் ரி.யு.எல்.எப் இன் ஒரு தீவிர ஆதரவாளராக இருந்தார் மற்றும் முன்னர் தமிழ் இளையோரின் பிரியத்துக்கு உரியவராக இருந்த முன்னாள் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினரான யோகேஸ்வரனின் நெற்றியில் தனது இரத்தத்தால் திலகமிட்டவராவார்.

1987 ஜுலை 5இல் விசு படித்த பாடசாலையான நெல்லியடி மத்திய கல்லூரியில் அமைக்கப் பட்டிருந்த இராணுவ முகாமின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் தொடர்புடையவர்களில் விசுவும் ஒருவர்.

இந்த தாக்குதலின் போதுதான் எல்.ரீ.ரீ.ஈ யின் கப்டன் மில்லர் என்கிற வல்லிபுரம் வசந்தன் வெடி பொருட்கள் ஏற்றப்பட்ட ஒரு பார ஊர்தியை இராணுவ முகாமுக்குள் செலுத்தி தன்னையும் வெடிக்க வைத்தார், அதன்படி புலிகளின் முதல் கரும்புலி அல்லது தற்கொலை குண்டுதாரி எனப் பெயர் பெற்றார்.

ஜுலை 5, நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டபோது அந்த சுற்றாடலில் உள்ள வீடொன்றின் மேல் மாடியில் விசு நிலை கொண்டிருந்தார். மில்லர் பார ஊர்தியை செலுத்திக் கொண்டு உட்செல்லுவதற்கு வசதியாக, ஆர்.பி.ஜி எறிகுண்டுகளை நெல்லியடி மத்திய கல்லூரி வெளிக்கதவுகளின் மேல் செலுத்தி அவற்றை வெடிக்க வைக்கும் பணியை மேற்கொள்ளும் ஒரு குழுவுக்கு பொறுப்பாக விசு நியமிக்கப்பட்டிருந்தார்.

இது திட்டமிட்டபடி நிறைவேற்றப் பட்டது. ஆனால் துரதிருஷ்டவசமாக ஆர்.பி.ஜி யினை இயக்கிக் கொண்டிருந்த ஒரு பெண் போராளியின் பின்னால் நின்றிருந்த விசுவை அதன் பின் வெடிப்பு தாக்கியது. இதன் விளைவாக அவரது கண் ஒன்று காயமடைந்தது.

விசு அதற்காக தமிழ்நாட்டுக்கு சென்று மதுரையில் உள்ள பிரபலமான அரவிந்தன் கண் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இதைத் தவிர கண்ணின் பார்வையை இழந்த விசு அதன்பின் நிறமுள்ள வில்லை பொருத்திய கண்ணாடியை அணியும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

இப்போது விசு அமிர்தலிங்கம் கொலையில் தொடர்பு கொண்டிருந்தார் என்றும் விசு எல்.ரீ.ரீ.ஈ யினால் வெளியேற்றப்பட்ட ஒரு துரோகி என்றும் செய்திகள் பரவியதைக் கேட்ட அவரது சகோதரர்களான முகுந்த் மற்றும் முரளி ஆகியோர் எல்.ரீ.ரீ.ஈ யின் உயர்மட்டத் தலைமை மீது அதீத வெறுப்பு அடைந்தார்கள்.


அவர்கள் இருவருக்கும் தங்கள் சகோதரர் ஒரு விசுவாசமான புலி என்பதும் மற்றும் அவர் அமிர்தலிங்கத்தை கொலை செய்தது புலிகள் இட்ட கட்டளைப்படியே என்பதும் நன்கு தெரியும். எனவே அந்த சகோதரர்கள் அதற்கான ஒரு விளக்கத்தை கேட்டு எல்.ரீ.ரீ.ஈ துணைத் தலைவர் மாத்தையாவுக்கு கடிதம் எழுதினார்கள். வெளிப்படையாக அந்தக் கடிதம் கோபத்தின் சிதறலாக வெளிவந்த கடும் வார்த்தைகளால் எழுதப்பட்டிருந்தது.

அந்தக் கடிதம் மகேந்திரராஜா என்கிற மாத்தையாவின் மனதை இளகச் செய்தது. எல்.ரீ.ரீ.ஈ யினால் உத்தியோகபூர்வமாக ஒரு அறிக்கையை வெளியிட முடியவில்லை, ஆனால் தமிழ் மொழியிலான செய்தி அறிக்கைகளில் 1990 களின் ஆரம்பத்தில், எல்.ரீ.ரீ.ஈ கூட்டங்களில் புலித் தலைவர்கள் அமிர்தலிங்கம் கொலையை ஒப்புக் கொள்ள ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டன. மாத்தையா தானே பொது மேடைகளில் எல்.ரீ.ரீ.ஈ தான் அமிர்தலிங்கத்தை கொன்றது என்றும் ரி.யு.எல்.எப் தலைவர்கள் துரோகிகள் என்றும் பகிரங்கமாக வெளிப்படுத்தினார்.

(தொடரும்)

# இலங்கை தொடர்பான போர்க்குற்றங்கள் எதுவரை செல்லும்?

**– த. வீமன் –**



இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பில் பல்வேறு வாதப்பிரதி வாதங்கள் இடம்பெற்று வருகின்ற போதிலும், இந்தப் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை என்பது சாத்தியமாகுமா? என்ற கேள்வி இன்று பரவலாக எழுந்துள்ளது.

உள்நாட்டில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு உரிய அங்கீகாரம் இலங்கை அரசினால் சர்வதேச விசாரணையாளர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை. உள்நாட்டில் சர்வதேச தரத்திலான விசாரணைப் பொறிமுறை ஒன்றை இலங்கை நிறுவியுள்ளது. இந்த விசாரணைப் பொறிமுறை முடிவதற்கு முன்னர் இலங்கை தொடர்பில் எவருமே எழுந்தமான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது.

அதாவது சர்வதே விசாரணைப் பொறிமுறை என்பது உள்நாட்டில் இடம்பெறுகின்ற விசாரணைப் பொறிமுறைகளில் தோல்வி ஏற்படுகின்ற பட்சத்திலே அடுத்தகட்ட விசாரணைப் பொறிமுறையாகும்.

உள்ளக விசாரணைப் பொறிமுறை முடிவதற்கு முன்னர் இலங்கையை கடுமையாக இறுக்கும் நோக்குடன் மேற்குலக நாடுகள் ஒருதலைப் பட்சமாக இந்த விசாரணைப் பொறிமுறையை முன்னெடுப்பதாக இலங்கை அரசாங்கம் சுட்டிக்காட்டி வருகிறது.

சர்வதேச சட்டம் ஒழுங்கு அனைவருக்கும் ஒரே விதமாக அமுல்படுத்தப்பட வேண்டும் என இலங்கை ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் அமைப்பின் சில நிறுவனங்களும், சில சர்வதேச நிறுவனங்களும் அடிப்படை நீதியை ஒரே விதமாக அமுல்படுத்துவதில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

சர்வதேச நிறுவனங்கள் சர்வதேச நீதிமன்றங்கள் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டிருக்கக் கூடாது என்றும் சர்வதேச மற்றும் தேசிய சட்டங்கள் ஒரே விதமாக அமுல்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் எழுந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளுக்கான மனித உரிமைகள் ஆணையாளராக புதியவர் ஒருவர் பொறுப்பு எடுக்கவுள்ள சூழ்நிலையில், இலங்கை தொடர்பான மிகைப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு ஐக்கிய நாடுகளின் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை அங்கீகாரமளித்துள்ளதாக அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

விசாரணைகள் சமீபத்திலேயே ஆரம்பமாகியுள்ள நிலையில் நவிப்பிள்ளை, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுவது பக்கசார்பான நடவடிக்கைக்கான உதாரணம் என வெளிவிகார அமைச்சு தெரிவித்துள்ளது. விசாரணைகளில் செல்வாக்கு செலுத்தி முன்கூட்டியே திட்டமிடப்பட்ட பாதையில் அது நடைபெறச்செய்வதற்கான முயற்சியை இது புலப்படுத்துகிறது என்றும் குறிப்பிட்டுள்ளது.

புதிய மனித உரிமைகள் ஆணையாளர் பக்கச் சார்பின்மை, தனிப்பட்ட உணர்வுகளுக்கு இடம் கொடுக்காமை, சமமாக நடத்துதல் போன்ற கொள்கைகளை பின்பற்றி செயற்படுவார் எனவும் நாடுகளின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு அரசாங்கங்களுக்குள்ள உள்ளூர் நியாயாதிக்கம் என்பவற்றை மதிப்பார் என எதிர்பார்ப்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா விசாரணைக் குழு முன்பாக எவரும் சாட்சியமளிக்கலாம், அதற்கு உரிமை உள்ளது. ஆனால் அவர்கள் வழங்கும் சாட்சியத்தை ஆராய வேண்டும். அது அரசியலமைப்புக்கு முரணானதா? இல்லையா என்று பார்க்க செய்யவேண்டும் அதன் பின்னரே அவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பது குறித்து முடிவு செய்ய முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.


இறுதிக்கட்ட யுத்த வேளையில் 3 முதல் 4 இலட்சம் வரையிலான மக்களை மீட்டெடுத்த போது யுத்தக் குற்றச் செயல்கள் இடம்பெற்றிருக்கும் வாய்ப்பு உண்டு. ஆனபோதிலும் மிகுந்த மனிதாபிமான நோக்குடன் அரசாங்கம் மீட்புப் பணிகளில் ஈடுபட்டது என ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறியிருக்கிறார்.

சில தரப்பினர் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது குற்றச் செயல்கள் மட்டுமே இடம்பெற்றதாக குற்றம் சுமத்தி வருகின்றனர். எந்த யுத்தமும் இன்பகரமானதாக அமையாது. எந்த விடயமும் நூறு வீதம் சரியாக அமையாது. அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ள பலர் முயற்சித்து வருகின்றனர். ஆனால் அரசாங்கத்தைப் பாதுக்காக்கக் கூடிய தரப்பினர்களிடமிருந்து ஆலோசனையைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம்.

ஐக்கிய நாடுகளின் விசாரணைகளில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சாட்சியமளிக்க முடியும். அவர்களது சாட்சியத்தின் உள்ளடக்கத்தினை [illegible]ங்கம் என்ற வகையில் நாங்கள் ஆராய்வோம் எனவும் அரசாங்கம் கருத்து வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை அரசாங்கத்தினால் நியமிக்கப் பட்டுள்ள விசாரணைக் குழுவானது யுத்த கால இழப்புகளில் முதல்கட்ட அறிக்கையை தாங்கள்

# விளையாட்டு



• ஹொக்கி மட்டையின் நீளம் 3 அடி.

• கிரிக்கெட் பிட்சின் நீளம் 22 யார்கள்.

• கிரிக்கெட் ஸ்டம்பின் உயரம் 27 அங்குலம்.

• பூப்பந்தின் குறுக்கு விட்டம் 2 அங்குலம்.

• கால்பந்தின் சுற்றளவு 28 அங்குலம்.

• உலகில் அதிக மக்களால் விளையாடப்படும் விளையாட்டு கால்பந்து.

• கால் பந் தாட்டத்தில் ஆடைகளில் எண்கள் பொறிக்கும் வழக்கம் 1938 ஆம் ஆண்டு உலகக் கோப்பை கால்பந்து போட்டியின்போது ஆரம்பமாயிற்று.

• கோல்.்.ப் விளையாட்டு ஸ்கொட்லாந்து நாட்டில் தோன்றியது.

• பிங்பாங் என அழைக்கப்படும் விளையாட்டின் பெயர் டேபிள் டென்னிஸ்.


• விம்பிள்டன் கோப்பையின் ஆரம்பகாலப் பெயர் .்.பீல்ட் கப்.

• கூடைப்பந்து விளையாட்டில் விளையாடுபவர், பந்தை 30 விநாடிக்குள் கூடையில் அல்லது அடுத்தவரிடம் போட்டுவிட வேண்டும். இது அவ் விளையாட்டின் விதிமுறைகளில் ஒன்று.

# சி.டி. யின் எந்தப் பக்கம் கீறல்கள் கூடாது?




சி.டி. மற்றும் டி.வி.டிக்களில், பதியப்படும் பளபளப்பான பக்கத்தில் கீறல்கள் எதுவும் ஏற்படக் கூடாது என்றும், மற்ற பக்கத்தில் அந்த அளவிற்கு பாதுகாப்பு தேவை இல்லை என்றும் பலர் நினைக்கின்றனர். ஆனால், பளபளப்பான பக்கத்தைக் காட்டிலும், தலைப்பு அல்லது படம் அச்சிடப்பட்ட மறு பக்கத்தில் கீறல்கள் ஏற்படுவதுதான் அதிக பாதிப்பை உண்டு பண்ணும். லேபிள் ஒட்டப்படும் பக்கத்தின் கீழாக, மிக மெல்லிய அலுமினிய பூச்சினை அடுத்தே டேட்டா பதியப்படுகிறது. எனவே இதில் கீறல்கள் ஏற்பட்டால், சரி செய்திட முடியாது. பளபளக்கும் பக்கத்தில் ஏற்படும் கோடுகளைக் கூட சரி செய்திடலாம். இதில் முடியாது. எனவே மேற்புறம், கீழ்புறம் என இரு பக்கத்திலும் கீறல்கள் இல்லாமல் பார்த்துக் கொள்வதே நல்லது.




# பறவை செய்திகள்...

• பென்குவின் பறவை நீருக்கு அடியில் பறக்கும் ஆற்றல் கொண்டது.

• கொக்கு, நாரை ஆகியவை ஒற்றைக் காலில் நின்று தூங்கும்.

• றொபின் பறவை தூக்கத்திலும் பாடும் இயல்புடையது.

• கிரிபெஸ் என்ற பறவை உணவு கிடைக்காதபோது தன்னுடைய இறகுகளையே உணவாக உண்ணும்.

• நீரை உறிஞ்சிக் குடிக்கும் ஒரே பறவை புறா.

• பறவைகளில் காகமே மிகவும் புத்திசாலியான பறவை.

• மிகச்சிறிய முட்டையிடும் பறவை தேன்சிட்டு.

• மரங்கொத்தியின் அலகும், மண்டை ஓடும் ஒரே எலும்பாலானவை.

• பறவைகளில் மிக நீண்ட ஆயுளை உடையது ஆந்தை.

• ஆந்தையால் ஒரே நேரத்தில் இரு கண்களாலும் இரு வேறு காட்சிகளைக் காண முடியும்.

• அதிகமான இறகுகளைக் கொண்ட பறவை அன்னப்பறவையாகும். இதற்கு 25,000இற்கும் மேலான இறகுகள் உண்டு.


• நியூசிலாந்தில் வாழும் கியா "KEA" என்ற பறவை இரண்டு அடி நீளம் உள்ளது. கார் கண்ணாடிகளைச் சுற்றியுள்ள றப்பர்தான் இந்தப் பறவையின் உணவு.

• ஹம்மிங் என்னும் இனத்தைச் சேர்ந்த பறவை முன்னோக்கியும், பின்னோக்கியும் பறக்கும் தனி ஆற்றல் உள்ளது. இதை இயற்கையின் விந்தை என்று சிறப்பாகச் சொல்கிறார்கள். இவ்வகை ஆபிரிக்காவில் பிரசித்தம்.

• பறவைகள் உடலின் வெப்பநிலை 38 டிகிரி செல்சியஸ் முதல் 44 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும்.

# காந்தியின் பார்வையில் காலனிய நீக்கம்

– அ.மார்க்ஸ் –




**கா**ந்தியம் என எதையாவது சொல்வதானால் அதன் அடிப்படை அவரது மிக ஆரம்ப கால எழுத்துக் களில் (1909) ஒன்றான "ஹிண்ட் ஸ்வராஜ்" நூலில் அடக்கம் என காந்தியியல் அறிஞர்கள் குறிப்பிடுவர். "இந்தியச் சுயாட்சி" என அதை மொழியாக்கலாம்.

காந்தி அதில் மூன்று விடயங்களைச் சொல்கிறார்.

**1.** பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவை வெற்றி கொள்ளவில்லை. அல்லது தம் பலத்தால் அவர்கள் இங்கே குந்தியிருக்கவில்லை. நாம் அவர்களுக்கு அதைத் தந்துள்ளோம்.

பிரிட்டிஷ்காரர்கள் நம்மை நாகரிகப் படுத்துவதற்காக வந்ததாகத் தமது ஆளுகையை நியாயப் படுத்துகின்றனர் (legitimize). பிரச்சினை என்னவெனில் நாமும் அதை ஏற்றுக் கொண்டுவிட்டதுதான். நாமும் நம்மை (மேற்கத்திய பாணியில்) நாகரிகப் படுத்தப்பட வேண்டியவர்களாக ஏற்றுக் கொண்டதுதான், அல்துஸர் சொல்வாரே அது போல இது ஒரு வகை "விளிப்பின் அரசியல்". "ஏய் திருடா" என ஒரு பொலிஸ்காரன் நம்மைப் பார்த்துக் கூவுகிறபோது நாம் நம்மைத் திருடனாக உணர்வது போல.

காந்தியைப் பொறுத்தமட்டில் "நாகரிகம்" (Civilization) என்பது ஒரு அற அடிப்படையிலான விகசிப்பு (Moral and Ethical Enterprise). மேலை நாகரீகத்தின் "வலிமையே வெல்லும்", "தகுதி உள்ளது மட்டுமே பிழைத்துக் கொள்ளும்" என்கிற அடிப்படைகளுக்கு இது வெகுதூரம்.

ஆக, காந்தியைப் பொறுத்த மட்டில் ஏகாதிபத்தியம் என்பது நமக்கு வெளியே இருக்கிற ஒன்றல்ல. ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபடுவதற்கு முதலில் நாம் அதை நமக்குள்ளிருந்து வெளியேற்றியாக வேண்டும்.

**2.** எந்திரங்களைக் கருவியாக்கிச் செயல்படும் முதலாளியத்தை காந்தி இரண்டாவது எதிரியாகச் சுட்டுகிறார். நவீன நாகரிகத்தின் குறியீடாக அவர் எந்திரங்களைச் சுட்டிக்காட்டுகிறார். அந்த வகையில் அதை ஒரு "பெரும் பாவம்" எனவும் குறிப்பிடுகிறார். எந்திரங்கள் என்பதைச் சற்று விசாலமாக்கி நாம் "தொழில் நுட்பங்கள்" எனவும் எடுத்துக் கொள்ளலாம்.

எந்திரங்கள் மனிதனை மனிதாய நீக்கம் (dehumanizes) செய்கிறது; அந்நியமாக்குகிறது என்றார். கிட்டத் தட்ட எந்திரங்கள் குறித்த ஹெய்டெ கரின் விமர்சனத்திற்கு நெருக்கமாக வருகிறார். நாம் நமது இருப்பையே (being) ஒரு வகைத் தொழில்நுட்பச் சட்டகத்திற்குள் வைத்துப் புரிந்து கொள்ள நேர்கிறது என்பார் ஹெய்டெகர்.

நவீன தொழில்நுட்பங்களின் அடிப்படையிலான முதலாளியத்தை வெறும் பொருளாதாரச் சுரண்டல் என்பதற்கும் அப்பாலான இன்னும் கொடூரமான ஒன்றாக ஹெய்டெகர், காந்தி, மார்க்ஸ் முதலானோர் காண்கின்றனர்.

மார்க்ஸ் "கூலி, விலை, இலாபம்" ஆகியவற்றோடு முடித்துக் கொள்ள வில்லை, அதையும் தாண்டி "அந்நிய மாதல்" என்கிற அளவிற்குப் பிரச்சினையைக் கொண்டு செல்வது குறிப்பிடத் தக்கது.

இதற்கு எதிரான ஒரு குறியீடாகத்தான் காந்தி ராட்டையையும் தக்ளியையும் ஏந்தினார். மற்றபடி மானுட உழைப்பையும், நேரத்தையும் மிச்சப் படுத்துவது என்கிற வகையில் அவர் எந்திரங்களையும், தொழில்நுட்பங்களையும் வெறுத்தார் இல்லை. தனது காலத்தில் மிக அதிகமாக ஒலி பெருக்கியையும் (mike), ரயிலையும் அதிகம் பயன்படுத்தியவர் அவர் என்பார்கள். எனக்குப் பிடித்த ஒரு கண்டுபிடிப்பு சிங்கர் தையல் மெஷின்தான் என அவர் ஒருமுறை கூறியதாகவும் சொல்வர்.

**3.** "எல்லையற்ற பகுத்தறிவு" என்பது மேலைப் பண்பாட்டை வரித்துக் கொண்டதன் இன்னொரு பிரச்சினை என்பது காந்தியின் மூன்றாவது விமர்சனம்.

பகுத்தறிவே வேண்டாம் என நான் சொல்ல வில்லை. அதற்குரிய எல்லையை உணர்ந்து செயல்படுவோம் என்றார்.

மேலை நாகரிகம் நம் மீது சுமத்திய இழிவுகளாக மட்டும் நாம் இதைக் கருத வேண்டியதில்லை. அது தனக்குத் தானே சுமத்திக் கொண்ட இழிவும் அழிவும் கூட. அந்த வகையில் மேலை நாகரிகம் அனுதாபத்துக்குரிய ஒன்றுங் கூட என்பது காந்தியின் கருத்து.

ஆக, காந்தி சொன்ன காலனியத்திலிருந்து விடுதலை என்பது வெறுமனே வெள்ளை ஆட்சியாளர்களை விரட்டி விட்டு அந்த இடத்தில் கறுப்பு ஆட்சியாளர்களை உட்கார வைக்கிற விவகாரமல்ல (இது அவரே சொன்னது).

காந்தியின் பார்வையில் காலனிய நீக்கம் என்பது நம் உள்ளிருந்து தொடங்கி பல்வேறு மட்டங்களில் செய்யப்பட வேண்டிய ஒன்று.

ஆனால் நாம் என்ன செய்தோம்? ஆட்சியாளர்களை மட்டும்தான் மாற்றினோம். காலனியம் நம்மீது திணிக்கப்படவில்லை, நாமே வரித்துக் கொண்டது என்றார் காந்தி. நவ காலனியம் மட்டுமென்ன அதுவும் நாமே வரித்துக் கொண்டதுதான். இன்னும் நாம் நம்மை நாகரீகப்படுத்த வேண்டியவர்களாகத்தான் நினைத்துக் கொண்டுள்ளோம்.

அப்படி நினைத்துக் கொண்டுள்ளவரை நாம் அனைத்திற்கும் மேலை நாடுகளையே நம்பி வாழ வேண்டியுள்ளது. காந்தி யின் காலத்தில் ஏகாதிபத்தியம் / காலனி நாடுகள் என உலகம் பிரிந்து கிடந்தது. இன்று வளர்ச்சிய டைந்த நாடுகள் / குறை வளர்ச்சி நாடுகள் என உலகம் பிரிந்து கிடக்கிறது. இரண்டு நிலைகளும் ஒன்றுதான்.

**அவ்வளவே.**

---

பூர்த்தி செய்துள்ளதாகவும், அடுத்த கட்ட அறிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் கூறியுள்ளதுடன், தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

சர்வதேச சட்டங்களை மதிக்கக் கூடிய சர்வதேச நியாயாதிக்கத்தின் படி விசாரணைகளை நடத்தக்கூடிய ஒரு வல்லுனர் குழுவினரையே உள்நாட்டில் விசாரணைகளுக்காக நியமித்து, இதன் முதற்கட்டமாக காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை பரவலாக மேற்கொண்டு வருவதாக அரசாங்கம் தெரிவிக்கிறது.

இந்த உள்ளகப் பொறி முறையைத் தாண்டி இதன் முடிவுகளை அறியாத வரைக்கும் சர்வதேச விசாரணை ஒன்று அவசியம்தானா? அல்லது உடனடியாகத் தேவைதானா என்ற கேள்வியை இன்று அரசாங்கம் உருவாக்கி விட்டுள்ளது.

இந்த நிலையில் ஐ.நா நியமித்துள்ள விசாரணைக் குழு அதன் இலக்கில் வெற்றிபெற முடியுமா? என்ற கேள்வி அரசியல் ஆய்வாளர்களிடையே தற்போது எழுந்துள்ளது.

# புவியியல் மற்றும் வரலாற்று சிறப்பு மிக்க கொடிகாமம் மண்ணின் பெருமைகள்




கொடிகாமம் (Kodikamam) இலங்கையின் வட மாகாணத்தின் யாழ்ப்பாணக் குடாநாட்டில், யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சியில், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒரு கிராமமாகும். இதன் தென்பகுதியில் கச்சாயும், தென்மேற்குப் பகுதியில் அல் லாரை மற்றும் மீசாலையும், மேற்குப் பகுதியில் மந்துவிலும், வடக்குப் பகுதியில் வரணியும் கிழக்குப் பகுதியில் மிருசுவிலும்,உசனும் எல்லைகளாக அமைந்துள்ளன.





ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில், இப் பிரதேசங்கள் கோவிற்பற்று என்று பிரிக்கப்பட்டபோது, கொடிகாமம் கச்சாய் கோவிற்பற்று என்ற பிரிவின் முக்கியமான கிராமமாக இருந்தது. இங்கு விவசாய நிலங்கள் அதிகளவில் காணப்பட்டமையால், இது (கோடி + கமம்) கோடிகமம் என ஆரம்பத்தில் அழைக்கப்பட்டு, பின்னர் அந்தக்காரணப் பெயர் மருவி, கொடிகாமம் என தற்போது அழைக்கப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியரும், பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற பொ.பாலசுந்தரம்பிள்ளை என்பவர், கொடிகாமத்தை யாழ். குடா நாட்டில், யாழ். நகரத்திற்கு அடுத்த நிலையில் வைத்து வளர்த்தெடுத்து நகரமாக்க வேண்டிய ஒரு கிராமமாக குறிப்பிடிருக்கிறார். காரணம் இந்தக் கிராமம் வடமராட்சி, யாழ். பிரதேசம், பச்சிலைப்பள்ளி ஆகிய மூன்று பிரதேசங்களையும் இணைக்கும் முக்கியமான ஒரு சந்திக் குடியிருப்பாகவும், அதனால் அதிகளவில் மக்கள் கூடும் இடமாகவும் இருந்தது சுற்றியுள்ள அனைத்து கிராமங்களிலும் விளையும் விளைபொருட்களையும், தொண்டைமானாறு முதல், பருத்தித்துறை, நாகர்கோவில், உடுத்துறை, ஆழியவளை, ஆகிய வடபிரதேச கடல்களிலிருந்தும், கடல்நீரேரியிலிருந்தும் பெறப்படும் கடல் உணவுகளையும் சந்தைப் படுத்தும் மிக முக்கிய மையமாக அமைந்துள்ளது. யாழ். குடா நாட்டிலேயே, மா, பலா போன்ற பழ வகைகளும், மரக்கறி, தேங்காய் மற்றும் மிகச் சிறந்த புகையிலையும் சந்தைப்படுத்தப்படும் இடமாகவும் கொடிகாமம் கிராமத்தின் சந்தை அமைந்திருக்கிறது.

ஆரம்பத்தில் கொடிகாமத்தில் வாழ்ந்த மக்கள் விவசாயத்தில் தமது அதிக கவனத்தை செலுத்தியிருந்தமையால், கல்வித்துறையில் முன்னேறுவது பற்றி அதிகம் சிந்திக்காது இருந்து வந்தனர். அதனால் அங்கு பெரிய பாடசாலைகள் உருவாகவில்லை. கல்வியில் அதிக கவனம் செலுத்தியவர்கள் பொதுவாக பேருந்திலோ அல்லது தொடருந்திலோ சாவகச்சேரி அல்லது யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கு நாளும் பயணம் செய்து தமது கல்வியைப் பெற்று வந்தனர்.தற்போது பெரும் கல்வி மான்களைக்கொண்ட கிராமமாக இதுமிளிர்ந்து வருகின்றது.



கொடிகாமம் திருநீலகண்ட பிள்ளையார் கோவில்.



இவ்வூரிற்கான முன்னைநாள் போக்கு வரத்து வாகனம்.



யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.



கொடிகாமம் கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை திறந்து வைக்கப்பட்டது - 2014.








புதுவருட மாபெரும் விளையாட்டு நிகழ்வு கொடிகாமம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்றது.

# நோயாளர்களின் நன்மை கருதியே பாஸ் நடைமுறையை கொண்டுவந்தோம்

## யாழ். வைத்தியசாலை பிரதிப்பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நோயாளர்களே எமக்கு முக்கியம் பார்வையாளர்கள் அல்ல. அதனால் தான் நோயாளர்களின் நலன் கருதி பாஸ்நடைமுறையை கொண்டுவந்துள்ளோம். அதிலும் தற்போது 3 பாஸ்கள் வழங்கி வருகின்றோம். என வைத்திய சாலையில் பாஸ் நடைமுறைதொடர்பில் யாழ். மாநகரசபை உறுப்பினர் கேட்டகேள்விக்கு பதிலளிக்கையில் யாழ். போதனா வைத்திய சாலையின் பிரதி பணிப்பாளர் டாக்டர் பவானந்தராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் சகல பெரிய வைத்தியசாலையிலும் இந்த நடைமுறை இருக்கின்றது. எமக்கு நோயாளரின் நலன்தான் முக்கியம் பெருமளவிலானோர் பார்வையாளராக செல்வதால் நோய்க்கிருமித் தாக்கம் அதிகரிக்கின்றது. அத்துடன் அவர்கள் அதிகளவில் கழிவுப் பொருட்களை வீசுதல் போன்ற பல்வேறு இடையூறுகளை செய்கின்றனர். அதனால் தான் இந்த நடைமுறை அறிவித்துள்ளது. ஆனாலும் நாம் தற்போது 3 பாஸ்களை வழங்கி வருகின்றோம். எனவே சிலபேர் இதுகுறித்து விசனம் தெரிவிக்கின்றனர். எமக்கு நோயாளர்களே முக்கியம் பார்வையாளர்கள் அல்ல.

நோயாளர்களை பராமரிப்பதில் எமக்கு அதிகளவில் பார்வையாளர்கள் வருவது சிரமத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் தான் இந்த நடைமுறை உள்ளது. அதை கருத்தில் கொண்டு அனைவரும் செயற்படவேண்டும் என்பது வைத்தியசாலை நிர்வாகத்தின் கோரிக்கையாக உள்ளது என்றார். (இ)

# குருக்கள் வீட்டில் கொள்ளை சாதுரியமாக முறியடிப்பு

(திருநெல்வேலி)

நல்லூர் பாலகதிர்காம தேவஸ்தான பிரதம குருக்களள் வீட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கொள்ளையர்களினால் கொள்ளை முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. அன்றிரவு 11.00 மணியளவில் மோட்டார் சைக்கிளொன்றில் கோடரி, கத்தி, பொல்லுகள் சகிதம் வந்திறங்கிய மூவர், வயது முதிர்ந்த குருக்களின் தாடியைப் பிடித்து இழுத்து அவரது கழுத்தில் சங்கிலி உள்ளதா எனத் தடவிப்பார்த்துள்ளனர்.

மூன்று கொள்ளையர்களில் ஒருவன் குருக்களின் தலைமீது கோடரியை உயர்த்தி அவரை வெட்டிக் கொல்லப்போவதாக மிரட்டியுள்ளான் இருக்கும் தங்க நகைகளையெல்லாம் தந்து விடும்படி பயமுறுத்தியுள்ளான். குருக்களோடு இருந்தவர்கள் சிலர் அலறியடித்துக்கொண்டு ஓடவே குருக்கள் கையில் அணிந்திருந்த காப்பு ஒன்றை உருவியபடி கொள்ளையர்கள் தப்பியோடி விட்டனர். காப்பு பவுணினால் செய்யப்பட்டிருக்கவில்லை.

மறுநாள் காலை குருக்களின் இளைய மகனுக்குத் திருமணமும் மாலை வரவேற்புவிழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனையறிந்தே நகைகளையும், பணத்தையும் கொள்ளையடிக்கும் நோக்கோடு திருடர்கள் வந்திருக்கலாம் எனக்கருதப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை கல்வியங்காடு சந்திக்கருகாமையில் உள்ள நல்லூர் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளரும் பணிப்பாளரும் நிலையத்தைப் பூட்டிவிட்டு வீடு செல்லும் வழியில் அவர்களது பணப்பை மோட்டார் சைக்கிளில் வந்த கொள்ளையர்களினால் பறிக்கப்பட்டதும் வெட்டப்பட்டுக்காயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பணப்பை பின்னர் உள்ளே எதுவுமில்லாத நிலையில் கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு சமீபமாக வீசப்பட்டிருந்தது.

முன்னர் இரு தடவை வீடு செல்லும் வழியில் இரவு முகாமையாளரின் பணப்பை பணத்துடன் பறிக்கப்பட்டதையடுத்து முகாமையாளர் பணத்தை இரவில் எடுத்துச் செல்வதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (137)




## நல்லோர் தொடர்பு

ஓர் ஊருக்கு சாமியார் வந்தார்அவர் நன்றாகப் பேசக் கூடியவர் சத்சங்கத்தைப்பற்றி அடிக்கடி வற்றுத்திச் சொல்வார். அவர் அன்று சில நண்பர்களை அழைத்து நான் ஓர் அற்புதம் செய்து காட்டுகிறேன். என்றார். என்ன அற்புதம் என்று கேட்டார்கள். அவர் அவர்களை ஓர் குளக்கரைக்கு அழைத்துச் சென்றார். ஒரு சிறிய கல்லை எடுத்துக் குளத்தில் போட்டார். அது நீரில் அமிழ்ந்து விட்டது.

கல் எங்கே என்று சாமியார் கேட்டார். நீரில் அமிழ்ந்து விட்டது. என்றார்கள் "கல் நீரில் மிதக்குமா?" என்று கேட்டார் சாமியார். மிதக்காது என்று விடை வந்தது. இத்தனை சிறிய கல்லே நீரில் அமிழ்ந்து விட்டதே. ஒரு பெரிய கல்லை தண்ணீரின் மேல் மிதக்கச் செய்ய முடியுமா? என்றார். குரு 'முடியவே முடியாது" என்றனர்.

நான்' மிதக்கச் செய்கிறேன். நீங்கள் ஒரு மணி நேரம் கழித்து வாருங்கள் என்று கூறிவிட்டு தன்னுடைய சிஷ்யர்களை அழைத்து அங்கே கிடந்த பெரிய மரக்கட்டையை உருட்டிக்குளத்தில் மிதக்கச் செய்தார். அந்தக் கட்டையின் மேல் பெரிய குண்டுக் கல்லொன்றைத் தூக்கி வைக்கும்படி சொன்னார். கட்டை சிறிது தண்ணீரில் ஆழ்ந்தாலும் அதன் மேல் இருந்து கல் அமிழவில்லை.

ஒரு மணி நேரத்தில் ஊர் மக்கள் சாமியாரின் அற்புதத்தைக் காண வந்து விட்டார்கள். குளத்தில குண்டுக்கல் தாழாமல் மிதந்ததைக் கண்டார்கள ஆனால் ஆச்சர்யப்படவில்லை.

சாமியார் மக்களைப் பார்த்துக்கேட்டார் கல் நீரில் அமிழ்ந்து போகாமல் நீரின் மேல் இருக்கிறதா? இல்லையா? ஆம். இதில் ஒன்றும் ஆச்சர்யம் இல்லையே! கட்டை மிதக்கிறது. அதன் மேல் கல் இருப்பதனால் அது நீரில் அமிழவில்லை. அப்படியா னால் கல் கட்டையாக மாறிற்றா? அதன் பாரம் குறைந்து விட்டதா?"

"இல்லை"

"கல் கல்லாகவே இருந்தாலும் கட்டையின் சார்ப்பினால் நீரின் மேல் மிதக்கிறது அல்லவா?"

"ஆம்"

"இப்படித்தான் இயல்பாக பிரபஞ்சச் சேற்றுள் அமிழ்கிற தன்மை படைத்தவராக ஒருவர் இருந்தாலும் இதில் அமிழாமல் மிதக்கும் உண்மைத் துறவிகளைச் சேர்ந்தால் அவர் பிரபஞ்சச்சேற்றில் ஆழாமல் இருக்க வழி பிறக்கும்"

இப்போது சாமியார் பேச்சைக் கேட்டு யாவரும் வியந்தார்கள்.

கல் தனியாக இருப்பதனால் எவ்வளவு சிறியதாக இருந்தாலும் குறைந்த பாரமுடையதாக இருந்தாலும் தண்ணீரில் ஆழ்ந்துவிடும் ஆனால் எவ்வளவு பாரமுடையதாயினும் மிதக்கும் கட்டையோடு சேர்ந்தால் அதுவும் மித்க்கும் அதுபோல எவ்வளவு பொல்லாதவராக இருந்தாலும் நல்லவர்களைச் சேர்ந்தால் அவர்களும் அறியாமை என்னும் நீரில் ஆழமாட்டார்கள். சத்சங்கம் அவ்வளவு சிறப்பானது என்று சாமியார் சொன்னார்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

## பதிவிருக்கப் பெட்டகம்

பார்த்திபன் சினிமாவில் ஏதாவது ஒன்றை புதிதாக செய்ய வேண்டும் என்று நீண்ட காலமாக முயன்று வந்திருக்கிறார். பல சமயங்களில் அந்த முயற்சிகள் ஏதோ ஒரு காரணத்தால் முழுமையடையாமல் போயிருக்கின்றன. ஆனால் இப்படி ஒரு படத்தை எடுப்பதற்குத்தான் பார்த்திபன் இவ்வளவு காலம் போராடியிருக்கிறார். அவரது அந்தப் படம் "கதை, திரைக்கதை, வசனம், இயக்கம்".

முதலில் இருந்து கடைசிவரை மொத்த படத்தையுமே பார்வையாளனுக்கும் இயக்குனருக்கும் இடையிலான ஒரு விளையாட்டுக் களமாக மாற்றியிருக்கிறார். சினிமாவின் அபத்தங்களை சினிமாவிற்குள் இருந்தே இந்தப் படம் கடுமையாக தாக்குகிறது. ஆனால் இது தமிழ் சினிமாவைப் பற்றிய கேலிப்படம் அல்ல. வாழ்க்கைக்குள்ளோ சினிமாவிற்குள்ளோ கதை என்ற ஒன்று இல்லை. வாழ்வை ஒரு கதையாக கட்டமைக்க விரும்புவது தர்க்கமில்லாத வாழ்வின் அபத்தங்களை எதிர்கொள்ள பயப்படும் நம் மனதின் விருப்பம் மட்டுமே. உண்மையில் குழப்பமான சம்பந்தமில்லாத நிகழ்வுகளின் தொகுப்புதான் இந்த வாழ்க்கை. இந்தக் குழப்பத்தைத்தான் இந்தப் படம் மிக அழகாக பேசுகிறது.

மிக சவாலான ஒரு கருவிற்கு மிகத்திறமையான ஒரு திரைக்கதையை பார்த்திபன் அமைத்திருக்கிறார். இந்தப் படம் முழுக்க பார்வையாளன் ஒரு கதாபாத்திரமாகவே இருக்கிறான். அவனின் பிரதிநிதிகள் அவ்வப்போது வந்து பேசிவிட்டுச் செல்கிறார்கள். ஒரு பிரதி தன்னைத்தானே எப்படிக் கலைத்துக்கொள்ள முடியும் என்பதற்கு இந்தப் படம் ஒரு சிறந்த உதாரணம். ஒரு படத்தின் சஸ்பென்ஸ், திருப்பம் என சொல்லப்படும் அனைத்து ஃபோர்முலாக்களையும் தெருவில் போட்டு உடைக்கிறது இந்தப் படம்.

தம்பி ராமய்யாவின் கதாபாத்திரமும் அவரது நடிப்பும் தமிழ் சினிமாவின் குறுக்கு வெட்டுத் தோற்றம். அகிலா கிஷோரின் உணர்சிகரமான நடிப்பு படத்திற்கு வேறொரு பரிமாணத்தைக் கொடுக்கிறது. ஒவ்வொரு பாத்திரத்தையுமே அதற்குரிய அழுத்தத்துடன் பார்த்திபன் கட்டமைத்திருக்கிறார். இந்தப் படத்தில் காதலின் தருணங்களை காட்டும் இடங்களில் மிக வசீகரமான காட்சிகளை உருவாக்கியிருக்கிறார்.

மிகத் தெளிவான கதையை மிகக் குழப்பமாக சொல்லும் இயக்குனர்களிடையே இவ்வளவு சிக்கலான ஒரு கதையை இவ்வளவு தெளிவாக சொன்ன பார்த்திபனுக்கு வாழ்த்துக்கள்.

**– மனுஷ்ய புத்திரன்**

சமீபத்தில் காலமான பால கைலாசம் இயக்குநர் கே.பால சந்தரின் மகன். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் உண்மையான தரவுகளின் அடிப்படையில் அமைய வேண்டுமென விரும்பியவர் அவர். அதற்காக திரு. கல்யாணராமன் தலைமையில் ஆராய்ச்சிக் குழு ஒன்றை நிறுவினார். கரு. ஆறுமுகத் தமிழன், செல்வ புவியரசன், செல்லப்பா, மண்குதிரை, குவளைக் கண்ணன், நர்மதா உள்ளிட்ட சிறுபத்திரிகைச் சூழலோடு தொடர்புடைய பலர் அதில் பணிபுரிந்தனர். பின்புல ஆவணங்களை நேர்த்தியாகவும் நம்பகத் தன்மையுடனும் தயாரித்துத் தயாரிப்புக் குழுக்களுக்கு அளித்தனர்.


முதலில் Twenty Twenty என்னும் பெயரில் ஒரு விவாத அரங்கைத் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தார். இந்தியாவின் வல்லரசுக் கனவு, இன்றைய பெண்ணியச் செயல்பாடுகள், இந்திய ஜனநாயகத்தின் திசைவழி முதலான பிரச்சினைகளை விவாதிக்க முயன்றார். அதற்காகத் தயாரிக்கப்பட்ட பின்புல ஆவணங்கள் புத்தகங்களாகப் போடுமளவுக்கு முக்கியமானவை. அவற்றை அவர் முழுமையாகப் படித்து விவாதிப்பார். பங்கேற்பாளர்களுக்கு மூன்று நாள்கள் பயிலரங்கு நடக்கும். அந்தப் பயிலரங்குகள் அரசியல் வகுப்புக்களுக்கு இணையானவை. காந்தியின் மீது பெரும் மதிப்புக் கொண்ட கைலாசம் பழங்குடிகள், தலித்துக்கள், சிறுபான்மையினர், மாவோயிஸ்ட்கள் என பலரது குரலையும் அவற்றில் ஒலிக்கச் செய்தார்.

Judgement Reserved என்னும் அவரால் திட்டமிடப்பட்ட மற்றொரு நிகழ்ச்சியும் முக்கியமானது. சொல்வதெல்லாம் உண்மை போன்ற ஆபாசமான நிகழ்ச்சிகளுக்கு எதிராக வாழ்வின் சிக்கல்களை ஆராயும் ஆரோக்கியமான நிகழ்ச்சி அது. அதே போல பெண்கள் பங்கேற்கும் 'ஒரு நிமிடம் ப்ளீஸ்' என்னும் உரையாடல் அரங்கு. 'வீடுதாண்டி வருவாயா' என்னும் பெண்களின் ஆளுமையை வெளிக்கொணரும் நிகழ்ச்சி. எதுவுமே அந்தத் தொலைக்காட்சி நிர்வாகிகளுக்குப் புரியவில்லை. நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவோர் எண்ணிக்கை குறித்த 'டிஆர்பி' பற்றி அபத்தமாகப் பிதற்றிக்கொண்டிருந்தனர். அந்த அபத்தத்திற்குக் கைலாசம் பலியானார்.

**– தேவிபாரதி**

# வடக்கு அபிவிருத்தியில் அமைச்சர் டக்ளஸ்

## வடக்கிற்கு அதிக நிதி கிடைத்தும் மாகாணசபை மக்களுக்கு எதுவும் செய்யவில்லை



(யாழ்ப்பாணம்)

எமது அரசாங்கம் இவ்வருடம் மாகாணசபைகளுக்கென நிதி ஒதுக்கீடு செய்துள்ள நிலையில் அதிக தொகை நிதி வடக்கு மாகாணத்திற்கே ஒதுக்கப்பட்டிருப்பினும் வடக்கு மாகாண சபை எமது மக்களுக்கு எதுவும் செய்யாதிருப்பது எமது மக்களுக்கு துரதிஷ்டவசமானதாகும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி தென்மராட்சி கரம்பகம் கிராமத்திற்கான மின்விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளகவீதிகள் உட்பட சில கோரிக்கைகள் இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன இவற்றில் பல மாகாணசபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளாகும்.

ஆனால், வடக்கு மாகாண சபை எந்தவொரு மக்கள் சார்ந்த பணிகளை முன்னெடுக்காமல் முடங்கிப் போய்க் கிடக்கிறது.

இதை நாம் கூறும் போது அரசும், ஆளுநரும் தடையாக இருப்பதாக பொய்ச்சாட்டுகளைக் கூறி, தப்பித்து வருகிறார்கள்.

அப்படியான தடைகள் எதுவுமில்லை.

அப்படி இருப்பின் அதுபற்றி நாம் பகிரங்கமாக விவாதிப்போம் என்றும் அவ்வாறு உண்மையில் ஏதேனும் தடைகள் இருப்பதாக இனங் கண்டால அவற்றை ஜனாதிபதியுடன் கலந்துரையாடி நான் அகற்றித் தருவேன் என்றும் நான் தொடர்ந்தும் கூறிவருகின்றேன்.

இதற்கும் அவர்கள் முன்வருவதில்லை. அதாவது உண்மையில் தடைகள் ஏதும் இல்லை என்பதே அதற்குக் காரணம்.

இருக்கின்ற அதிகாரங்களைக் கொண்டு எமது மக்கள் நலன்சார்ந்து பல திட்டங்களை மாகாண சபையால் முன்னெடுக்க முடியும்.

ஒருகாலத்தில் மாகாணசபை முறையை எதிர்த்தவர்கள் இதிலே ஒன்றுமில்லை என்றவர்கள் இன்று அதனைக் கைப்பற்றி முடக்கி வைத்திருக்கிறார்கள்.

ஒன்று - அதனை இயக்க அவர்களுக்கு தெரியாதிருக்கின்றது. இல்லையேல் இயக்கத் தெரிந்தும் இயக்காதிருக்கின்றனர். இதுதான் அவர்களது அரசியல்.

இங்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை படிப்படியாக நான் நிறைவேற்றுவேன். அதன் பிரகாரம் முன்பள்ளியை உடனடியாக செயற்படுத்த நடவடிக்கை எடுப்பேன்.

ஆரம்ப சுகாதார நிலையம், பொது நோக்கு மண்டபம் உட்பட ஏனைய தேவைகள் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

இக்கிராமம் இன்று ஓரளவு முன்னேற்றம் கண்டிருக்கிறது.

இந்நிலை மேலும் வளர்ச்சி பெறவும் இக்கிராமத்தினதும் மக்களினதும் வாழ்வாதாரம் சிறக்கவும் நான் தொடர்ந்து உழைப்பேன் என்றார்.

## நாம் முன்னெடுக்கும் அரசியலே முன்னேற்றத்தை தந்திருக்கிறது



ஈ.பி.டி.பி.யினராகிய நாம் முன்னெடுத்து வரும் அரசியலே இன்று இப்பகுதிக்கும் இப்பகுதி மக்களுக்கும் இந்தளவு முன்னேற்றத்தைத் தந்திருக்கிறது. இப்பகுதியைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இம் மகிழ்ச்சி தொடர்ந்து நிலைக்க வேண்டுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். கடந்த 19 ஆம் திகதி வலிகாமம் வடக்கு மாவை கலட்டி கிராமத்திற்கான மின்விநியோகத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரைநிகழ்த்தும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன் உரையாற்றியதுடன், தெல்லிப்பளை பிரதேச செயலர் சிறிமோகனன், மின்திட்ட அதிகாரிகள், கிராம அலுவலர், சமுர்த்தி உத்தியோகத்தர், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்களான அன்பு, கணேஸ் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## கமநலசேவை நிலையத்திற்கு உடையார்கட்டில் புதிய கட்டடத்தொகுதி

முல்லைத்தீவு, உடையார்கட்டு கமநலசேவை நிலையத்திற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 11.7 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

யுத்தத்தால் உடையார்கட்டு கமநலசேவை நிலையக் கட்டடத் தொகுதி சேதமடைந்திருந்தது. இந்நிலையில், மேற்படி நிதி மூலம் கடந்த ஜூலை மாதம் முதல் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை, புதுக்குடியிருப்பு கமநலசேவை நிலையத்தின் உரக்களஞ்சிய கட்டடமும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 3.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஜூலை மாதம் முதல் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது." மேலும், கொக்கிளாய் கமநலசேவை நிலையத்திற்கு புதிய கட்டடத் தொகுதி அமைப்பதற்கு 9 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப் பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் நிதி கிடைத்தவுடன் கட்டடப் பணிகள் ஆரம்பமாகும் எனவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## வீதி விதிமுறைகளை மீறிய 8 சாரதிகளுக்கு தண்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் வீதி விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 8 சாரதிகளுக்கு 44 ஆயிரத்து 500 ரூபாய் தண்டம் விதித்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தார்.

சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய 2 பேருக்குத் தலா 3000 ரூபாவும் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் ஆகியன இல்லாமல் மோட்டார் சைக்கிள் செலுத்திய 5 பேருக்கு தலா 6000 ரூபாவும், சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப்பத்திரமின்றி மற்றும் வரிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய ஒருவருக்கு 8,500 ரூபாவும் தண்டமாக விதிக்கப்பட்டது.

மேற்படி எட்டுப்பேரும் கடந்த வாரத்தில், கைது வெய்யப்பட்டு, பொலிஸ் பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தனர். தொடர்ந்து மேற்படி நபர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் வழக் குத் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே நீதவான் மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

## உண்டியல் திருட்டு முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மீசாலை காளிகோவிலில் இருந்த உண்டியலைத் திருடர்கள் திருடமுற்பட்டபோது பொது மக்கள் விழித்துக் கொண்டமையால் அம்முயற்சி கைவிடப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் கூறுகையில்,

ஆலயத்திற்குள் அதிகாலை நுழைந்த திருடர்கள் ஆலயத்திலிருந்த உண்டியலை உடைக்க முற்பட்டுள்ளனர். சத்தம் கேட்டு அயலவர்கள், ஆலயத்துக்கு வந்த வேளையில் உண்டியலை உடைக்க முற்பட்டவர்கள் தப்பியோடியுள்ளனர்.

இது தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் நேற்றுமுன்தினம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பரமர் சங்கமம்



'சுவர் இருந்தாத்தான் சித்திரம் வரையலாம்' எண்ட பழமொழியை இண்டைய இளைஞர்களிடம் கூறினா 'ஐயோ இவருக் கொண்டுமே தெரியா' தெண்டு கூசாமல் முன்னப் பின்னை யோசிக்காமல் டக்கெண்டு சொல்லிப் போடுவாங்கள்.

இது என்ன காலமெண்டு நினைக்கிறியள், போதாக் காலமெண்டு பழசுகள் நினைக்கும். புதுசுகள் கணனி, தொலைக்காட்சி, மின்னஞ்சல், கைத்தொலைபேசி, முகப்புத்தக காலமெண்டு அடுக்கிக்கொண்டு போகுங்கள். அதையும் விட கலிகாலம் எண்டதை தீரவே மறந்திடுங்கள்!

சமீபத்திலதானை சர்வதேச இளைஞர் தினமும் வந்து போனது. இளைஞர் சக்தி நாட்டுக்கு முதுகெலும்பு போன்றது. இன்றைய இளைஞர் நாளைய நாட்டின் தலைவரென்று எத்தனையோ சொல்லிப் போயினர். அதெல்லாம் பொய்யில்லை. நூற்றுக்கு நூறு உண்மையான விசயம்.

இளைஞர்களின் பங்களிப்பு தொழிற்துறையில் தொண்ணூறு வீதம் கிடைத்தாலே நாட்டின் பொருளாதார வளர்ச்சி முன்னிற்கும். அதேவேளை சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராதெண்டும் சொல்வதையும் கேட்டு வருகிறோம். அது ஏன் சிறுவர் தான் இளைஞர்களாக பரிணமிக்கினம்.

அந்த வயதில் அடியாத மாடுபாடியாதெண்டது போலை புழைகளைக் கண்டிச்சு வளத்தால் அந்தப் புள்ளையள் இளைஞராக வளரேக்க ஒழுங்காக வளருங்கள். காலங்கடந்து திருத்தப்போனால் அது பெற்றோரென்ன ஆசானென்ன கை நீட்டவே செய்யும்.

பாரிய இடம்பெயர்வால் வன்னிக்குப் போய் வந்த இளைஞரெல்லாம் தெருச்சந்தியளில் கூடித்தான் நிக்கினம். உப்புடி நிக்கேக்கை என்னென்னவோ வெல்லாம் கதைகளில் வந்து போகும். அவற்றைப் பரீட்சாத்தமா செய்து பாத்தா என்ன எண்ட சிந்தனை வந்தாப் பிறகென்ன.

பெரியவர், பெண்களை பகடிக்களாக்குவது, வழிப்பறி களவுகளில் ஈடுபடுவது, கூடிக்குடிப்பது இப்புடிப்போய் வாள் வெட்டு சந்திக்குச் சந்தி தாஸ் குறூப், தினேஸ் குறூப் தோன்றி யாழ்ப்பாணக்கல்விப் பாரம்பரியம் பின்நோக்கிப் போய் ஆகஸ்ட் மாத ஊடகவியலாளர் பொலிஸார் சந்திப்பில் கிடைத்த தகவல்களை அதிச்சிக்குரிய செய்திகளாகக் குடாநாட்டுப் பத்திரிகைகள் மறுநாள் பிரசுரித்திருந்ததைப் பார்த்து நாடே மூக்கின்மேல் விரலை வைத்து நின்றது.

பிரேசில் நாட்டுத் தயாரிப்பான வாள்கள் இளைஞர் கைகளில்... அக்காலச் சூழலில் யாழ்.மாவட்டத்தில் இருநூற்று முப்பத்து நான்கு குற்ற வாளிகள் கைது... இவற்றில் 34 பேர்கள் வாள் வெட்டு, கோஷ்டிச்சண்டைகள் காரணமாக பிடிக்கப் பட்டவர்...; என்றந்தச் செய்திகள் பறை சாற்றின.

அவற்றால் யாருக்கு பெருமை, நன்மை? இருந்த குடாநாட்டு மதிப்பும், மரியாதையும் வேவ்வேறு மாகாணங்களில் சிதைக்கப்பட்டுக் காறித்துப் புற அளவுக்கு ...லையா! இளைஞர் சக்தி நல்வழிகளில் பேணப்பட்டாலே நாட்டுக்கும், இனத்துக்குத் வளர்ச்சியாகும்.

சுவர் எனக் சுட்டப்படும் இளைஞர்திடமாக இருந்தாலே சித்திரம் என்னும் வாழ்வியலை சிறப்பாக உருவாக்கலாம் இளைஞர்கள் இனியாவது சிந்திப்பார்களா... என்ன நான் சொல்லுறே....

மழைகாலத்தில் வனங்கள் தண்மை மிக்கனவாக இருந்தால் வரட்சிக் காலத்தில் வனங்கள் ..................... ....................................................... மிக்கனவாக இருக்கும்

**பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

18) நாங்கள் ..................................................... சென்றோம்.
(சரணலயம் ∴ சரணாளயம் ∴ சரணாலயம் ∴ சரணாழயம்)

19) மக்கள் அக்கிராமத்தை ........................................ கிராமம் என்று அழைத்தனர்
(பூச்சோலைக் ∴ பூஞ்சோலைக் ∴ பூஞ்சேலைக் ∴ பூஞ்சோளைக்)

**பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.**

20. கைகொடுத்தல் - ..............................
21. கிணற்றுத் தவளைபோல - ..............................

**பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில் ) எழுதுக.**

22. புத்தகம் - ..............................
23. பேனை - ..............................
24. ஐந்து - ..............................
25. பச்சை - ..............................

**பின்வரும் தொடர்களின் கருத்தினை தமிழில் எழுதுக.**

26. Silence Please - ..............................
27. Thank you - ..............................
28. Come in - ..............................
29. What is this?- ..............................

**பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தினை சிங்களத்தில் எழுதுக.**

30. அம்மா - ..............................
31. கதிரை - ..............................
32. மாம்பழம் - ..............................
33. அதிபர் - ..............................

34. பின்வரும் அரசர்கள் கட்டுவித்த குளங்கள் முறையாக அமையும் விடையின் கீழ்க் கோடிடுக.

A - தாது சேனன் C - தேவநம்பிய தீசன்
B. - மகாசேனன் D - பண்டுகாபயன்

1. A - அபயவாவி B - மின்னேரியா C - திஸ்ஸவாவி D - கலாவாவி
2. A - மின்னேரியா B. - கலாவாவி C - திஸ்ஸவாவி D - அபயவாவி
3. A - கலாவாவி B. - மின்னேரியா C - திஸ்ஸவாவி D - அபயவாவி
4. A - கலாவாவி B. - திஸ்ஸவாவி C. - அபயவாவி D - மின்னேரியா

35. இந்தியாவிலுள்ள அஜந்தா ஓவியங்களுக்கு ஒப்பான, கலைத்துவ படைப்புக்கள் காணப்படும் இடம் எது?
1.சிகிரியா 2. கம்பளை
3. தலதாமாளிகை 4. எம்பக்க தேவாலயம்

36. வொலிபோல் விளையாட்டுக்கான ஒரு குழுவிலுள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. 6 2. 7 3. 10 4. 12



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2015

பகுதி - I
1.30 மணி

# கல்வி முரசு

வெளியீடு 1



**கீழே தரப்பட்டுள்ள கூட்டுக்குள் ஒரு குடும்பத்தின் உறவுமுறை குறித்துக் காட்டப்பட்டுள்ளது. உறவுமுறைகளைக் கவனமாக அவதானித்து 1ஆம் , 2 ஆம் வினாக்களுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்க.**


A யின் தாய் B ஆவார் B யினது மகள் C ஆவார்
C யின் கணவர் D ஆவார் E, F என்போர் D யின் பிள்ளைகளாவர்

01) இக்குடும்பத்தின் மூத்த உறுப்பினரைத் தெரிவு செய்து கோடிடுக
1) C 2) B 3) A 4) D

02) E என்பவர் பெண் பிள்ளையாயின் A,E என்பவர்களுக்கான உறவு முறை யாது?
1) மாமா - மருமகள் 2) பெரியம்மா - மகள்
3) பெரியப்பா - மகள் 4) தாத்தா - பேத்தி

**கீழே முதலில் தரப்பட்டுள்ள முழு உருவினை ஆக்குவதற்கு ஆறு துண்டுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மேலதிகமானது. தேவையற்ற பகுதியின் ஆங்கில எழுத்தினைத் தெரிவு செய்து கோடிடுக.**

03)




**எதிரே உள்ள கோலத்தை அவதானித்து பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

04)

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | ⇨ | 9 | ☆ | 81 |
| 5 | ☆ | 25 | ⇨ | 30 |
| 3 | ☆ | 9 | ☆ | B |
| 8 | ☆ | A | ⇨ | 69 |

1) B இன் பெறுமதி யாது?
1) 15 2) 21 3) 81 4) 85


2) A இன் பெறுமதி யாது?
1) 13 2) 14 3) 24 4) 64

05) பானுவிடம் மூன்று வகையான நாணயக்குற்றிகள் 12 இருந்தன. அந்நாணயக் குற்றிகளின் முழுப் பெறுமதி ரூபா 30 ஆகும்.
மேற்கூறிய கருத்தினைத் திருப்திப்படுத்தும் கூற்று


1) ரூபா 5 நாணயம் 4; ரூபா 2 நாணயம் 4; ரூபா 1 நாணயம் 2
2) ரூபா 2 நாணயம் 6; ரூபா 5 நாணயம் 3; ரூபா 1 நாணயம் 3
3) ரூபா 1 நாணயம் 6; ரூபா 5 நாணயம் 3; ரூபா 2 நாணயம் 3

06) முகம் பார்க்கும் கண்ணாடியின் முன்னால் நின்று கொண்ட ஒருவர் தனது உருவத்தைப் பார்த்துக்கூறிய கூற்றுக்களிடையே மிகச் சரியான கூற்று யாதாக இருக்கும்?
1) இக்கண்ணாடியில் தெரிபவரின் தந்தை எனது தந்தை ஆவார்.
2) இக்கண்ணாடியில் தெரிபவரின்தந்தை எனது சிறிய தந்தை ஆவார்
3) இக்கண்ணாடியில் தெரிபவரின் தந்தை எனது மகனின் மாமன் ஆவார்.

07) தரப்பட்டுள்ள அட்டைத்தாளைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட பெட்டியினைத் தெரிவு செய்து கோடிடுக.




08) மாணவன் ஒருவன் காலையில் எழுந்து கால்முகம் கழுவி ஆயத்தமாகி பாடசாலை சென்று வகுப்பறையில் படிக்கும் விதத்தினைக் காட்டும் ஐந்து சந்தர்ப்பங்களின் படங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளன. இந்த ஐந்து சந்தர்ப்பங்களையும் ஒழுங்குமுறைப்படி காட்டும் விடை எது?




1) 2,5,3,4,1 2) 2,4,1,3,5 3) 4,3,5,1,2

கீழே சில வாக்கியங்களும், ஒவ்வொரு சொற்களுக்குமான குறியீடுகளும் அருகருகே தரப்பட்டுள்ளன. இருப்பினும், சொற்களுக்குரிய குறியீடுகள் ஒழுங்குமுறையில் வைக்கப்படவில்லை. ஒவ்வொரு சொற்களுக்குரிய குறியீடுகளை இனங்காண்பதன் மூலம் 9 ஆம் 10 ஆம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இன்று | பாடசாலை | விடுமுறை | நாள் | ▲ | ❄ | ✹ | ✿ |
| நான் | நாளை | பாடசாலை | செல்வேன் | ▲ | ❄ | ✶ | ❀ |
| நான் | இன்று | கோயிலுக்கு | செல்கிறேன் | ★ | ❀ | ● | ◎ |
| நாளை | வங்கி | விடுமுறை | நாள் | ✹ | ✢ | ✶ | ✿ |

09) இன்று பாடசாலை செல்கிறேன் என்பதற்குப் பொருத்தமான குறியீடுகள் எவை?

1) ❄ ▲ ● 2) ▲ ✿ ✢ 3) ● ▲ ◎

10) ❀ ✹ ✿ ◎ ❄ எனும் குறியீடுகள் தரும் கருத்து யாது?


1) நான் வங்கி விடுமுறை நாள் செல்வேன்
2) நான் விடுமுறை நாள் கோயிலுக்குச் செல்வேன்
3) நாளை விடுமுறை நாள் நான் கோயிலுக்குச் செல்வேன்.

11) 1 ஆம் 2 ஆம் பொதிகளில் உள்ள பொருட்களின் பெறுமதிகளை அவதானித்து 3 ஆம் பொதியில் உள்ள பொருளின் பெறுமதியைக் கணித்து விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.




1 ஆம் பொதி 2 ஆம் பொதி 3 ஆம் பொதி

12)





என்றவாறு மின் குமிழ்கள் பொருத்தப்பட்ட கொடி ஒன்று அருகே தரப்பட்டுள்ளது. இதில் 50 ஆவது மின்குமிழின் நிறம் யாது? ........................................



தரப்பட்டுள்ள தகவல்களுக்கேற்ப பொருத்தமான விடையினைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

13)




A,B,C,D,E,F ஆகிய ஆறு நகரங்களை இணைக்கும் பாதைகள் கீழே உருவப்படத்தின் மூலம் தரப்பட்டுள்ளன. அவற்றில் D எனும் நகரத்திலிருந்து E நகரத்தினூடாக F எனும் நகரம் வரைக்குமான தூரம் யாது?
........................................

குறித்த வலயம் ஒன்றில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் அதி கூடுதலான வருகை தந்த முதல் ஐந்து மாணவர்களும் தெரிவு செய்யப்படுவர். மாணவராயின் ஒரு புத்தகப் பையும் மாணவியாயின் ஒரு குடையும் வழங்கத் தீர்மானித்து தகவல் பெறப்பட்டது. இத்தகவலின்படி சேகரிக்கப்பட்ட விபரம் பின்வருமாறு,

36 பாடசாலைகளில் முதல் 5 மாணவர்களின் விபரம்
ஆண் - பெண் - பெண் - ஆண் - ஆண்
45 பாடசாலைகளில் முதல் 5 மாணவர்களின் விபரம்
ஆண் - பெண் - பெண் - ஆண் - பெண்
39 பாடசாலைகளில் முதல் 5 மாணவர்களின் விபரம்
பெண் - ஆண் - பெண் - ஆண் - பெண்

இத்தகவல்களைப் பயன்படுத்தி 14 ஆம் , 15 ஆம் வினாக்களுக்கு உரிய விடைகளை புள்ளிக் கோட்டில் எழுதுக

14) 120 பாடசாலைகளுக்கும் வழங்குவதற்கு வாங்க வேண்டிய புத்தகப் பைகளின் எண்ணிக்கை யாது?
........................................

15) குடை ஒன்று ரூபா 200.00 எனின் குடைகளை வாங்குவதற்குச் செலவாகும் தொகை யாது?
........................................

## பகுதி II


16) பின்வரும் விபரணத்தை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

மழை காலத்தில் வனங்கள் தண்மை மிக்கனவாகக் காட்சியளிக்கும். அக்காலத்தில் மரங்கள் எல்லாம் பச்சைக் கம்பளம் போர்த்ததுபோலக் காணப்படும். திறந்த வெளிகளில் புற்கள் உயர்ந்து வளர்ந்திருக்கும். குழிகளில் எல்லாம் நீர் நிறைந்திருக்கும். நதிகளிலோ, குளங்களிலோ மிருகங்கள் தண்ணீர் குடிக்கப் பதுங்கிச் செல்லும் நிலையை நாம் காணமுடியாது. நன்றாக விளைந்த கிழங்குகள், வேர்கள், இலைகள் என்பவற்றைச் சுவைத்து உண்டு பருத்து பன்றிகளோடு, மான்களும் அங்குமிங்கும் அலைந்து திரிகின்றன. களிறுக் கூட்டம் நதிக்கரைகளில் நின்று ஆரவாரம் செய்யாது காட்டினுள்ளே ஆடி அசைந்து செல்வதையும் காணலாம்.

01. வனங்கள் என்பதன் ஒத்த கருத்துச் சொல் ஒன்று தருக. ........................................
02. பருத்து என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ஒன்று தருக ........................................
03. களிறு என்பதற்குரிய பெண்பாற் சொல்லை எழுதுக ........................................
04. அஃறிணை பன்மை நிகழ்கால வினைச்சொல் ஒன்று எழுதுக ........................................
05. இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்று எழுதுக. ........................................
06. தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக ........................................
07. ஆடி அசைந்து என்பதாற் கருதப்படுவது யாது? ........................................
08. நதிகளிலோ குளங்களிலோ விலங்குகளுக்கு நீர் குடிக்க வேண்டிய தேவை ஏன் ஏற்படுவதில்லை?
........................................
09. ஆரவாரம் என்பதாற் கருதப்படுவது யாது? ........................................
17. வெற்றிடத்திற்கு மிகப் பொருத்தமான விடையை எழுதுக.

# நாகர்கோவில் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு அமைச்சரின் முயற்சியே காரணமாகும்

## வடமராட்சி கடற்றொழில் சமாச உபதலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மிகவும் நல்ல நிலையிலான வாழ்க்கையை மேற்கொண்டிருந்த மக்கள் வாழ்ந்து வந்த இப்பகுதி கடந்த கால அழிவுகளால் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது. எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியாலேயே இப்பகுதியில் மீள்குடியேற்றங்கள் முதல் அனைத்து அடிப்படை வசதிகளும் சாத்தியமாயிற்று என வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்தின் உபதலைவர் சிவசாமி தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நாகர்கோவில் வடக்கு பகுதிக்கான மின்விநியோகத்திட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், இப்பழைய கிராமம் இன்று மிகவும் வித்தியாசமான முறையில் வளர்ச்சி கண்டு வருகிறது.

பலதேவைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. பாடசாலை கட்டடம் உட்பட புதிய கட்டடங்கள் எழுந்துள்ளன.

இவை மட்டுமன்றி அமைச்சர் பொதுச்சபை ஒன்றை ஒவ்வொரு பகுதிகளுக்குமாக நிறுவி அதனூடாக வாழ்வாதார உதவிகள் உட்பட பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை அவ்வப் பகுதி மக்களின் நேரடி பங்களிப்புக்களுடன் மேற்கொண்டு வருகிறார்.

அந்தவகையில் இப்பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் எனக்கு உதவியாக இருந்து வரும் வடக்கின் வசந்தம் மின் திட்ட அதிகாரிகள் அரச அதிகாரிகள் உட்பட அனைவருக்கும் எமது மக்கள் சார்பாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு இம்மின் விநியோகத் திட்டத்தின் மூலம் 224 குடும்பங்கள் பயன்பெறவிருக்கின்றன.

எமது மக்களுக்கான உண்மையான தேசியத்தை முன்னெடுத்து உழைப்பவர்கள் நாங்கள்தான். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. நான் ஆரம்பத்தில் வரும்போது இப்பகுதி அழிவுற்ற நிலையில் இருந்தது. இது எனக்கு கவலையை ஏற்படுத்தியது மேலும் இப்போது இப்பகுதியைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்றார்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் வடமராட்சி இணைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் உரைநிகழ்த்தினார்.வடக்கின் வசந்தம் மின் விநியோகத் திட்டத்தின் உயரதிகாரிகள், கிராமசேவையாளர்கள், கிராம முக்கியஸ்தர்கள், அரச அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் போது இக்கிராமம் சார்பில் ஜோசப் ஜோன்சன் அமைச்சருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# சனசமூக நிலையங்கள் அறிக்கைகளை விரைவாக சமர்ப்பிக்க அறிவுறுத்து

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பிரிவுகளில் உள்ள பெரும்பாலான சனசமூக நிலையங்கள் கணக்கறிக்கை, ஆண்டறிக்கை போன்றவற்றை உரியமுறையில் சபைக்கு சமர்ப்பிக்கவில்லை என கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் குறை கூறப்பட்டது.

இவற்றை நேரில் சென்று பார்வையிட்டு இவற்றின் நிர்வாக செயற்பாடுகள் பற்றி நடவடிக்கைகளை எடுக்கவும் சபை தீர்மானித்துள்ளது.

குப்பைகளைச் சேகரித்து அவற்றைக் கொண்டு சென்று கொட்டுமிடங்களில் உள்ள அயற் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் அவற்றினால் தமது சூழல் பாதிக்கப்படுவதாகக் கூறி குப்பை வண்டிகளைத் திருப்பியனுப்புவதால் சபைக்குட்பட்ட பிரதேசத்தில் குப்பைகளை அள்ளுவதில் நெருக்கடி நிலை தோன்றியிருப்பதாகவும் சபையில் சுட்டிக்காட்டப்பட்டது.

மருந்தடித்துப் பழுக்க வைத்து விற்பனை செய்யும் பழக்கடை வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருந்தடித்து விற்பனை செய்யும் பழ வியாபாரிகளை முதலில் எச்சரிக்கை செய்வதெனவும், அதனை மீறி வியாபாரம் செய்யும் பழ வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வ தெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட 254 வீதிகளுக்கு பெயர்ப் பலகை நாட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறை வீதி, பலாலி வீதி, காங்கேசன்துறை வீதி போன்ற முக்கிய வீதிகளில் வரவேற்பு வளைவு அமைப்பதெனவும் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (137)

# கரவெட்டி கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் கரவெட்டி மற்றும் கரண வாய் பிரதேச உள்ளக கிராமங்களுக்கு குடிநீர் விநியோக நடவடிக்கை முன் னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் கடும் வறட்சியான காலநிலையால் குடிநீரைப் பெறுவதற்கு கிராம மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில் கிராம மக்களின் குடிநீர் தேவையை கருத்திற் கொண்டு குடிநீர் விநியோக நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி கரவெட்டி கிழக்கு ஆட்டுப்பட்டி மண்டபம், யாக்கரு பொது மண்டபம், வளர்மதி சனசமூக நிலையம் காட்டுப்புலம் முருகன் கோவில் வளவு, கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலை, மத்தொணி ஸ்ரீ நாரதா பாடசாலை வீதி, உடுப்பிட்டி இராசலிங்கம் சனசமூக நிலையம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கே குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

எனினும் விநியோகிக்கப்படும் குடிநீர் போதுமானதாக இல்லை எனவும் பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (18)

# சுகாதார சேவைகள் பணிமனைக்கு தேசிய உற்பத்தித்திறன் விருது

(யாழ்ப்பாணம்)

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட தேசிய உற்பத்தித்திறன் விருதுகளுக்கான போட்டியில் அரச திணைக்களங்களுக்கான பிரிவில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணமும், ஆதார வைத்தியசாலை பருத்தித்துறையும், மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளன.

அத்துடன் பிரதேச வைத்தியசாலை சங்கானைக்கு விசேட பாராட்டுக்குரிய விருதும் கிடைத்துள்ளது.

2010 ஆம் ஆண்டு மத்திய சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட தேசிய சுகாதார மேன்மைக்கான விருதுகள் போட்டியில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணமும் ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறையும் விருதுகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சத்துணவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வரணிப் பிரதேசத்தில் இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வரணிப் பிரதேச வைத்தியசாலையில கடந்த திங்கட்கிழமை சத்துணவாக 2 பைக்கற் திரிபோஷா மா வழங்கப்பட்டதாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

பெருமளவான தாய்மார் இவ் இலவச சத்துமாவை பெற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் இலவச மாவை வரணி பிரிவு குடும்ப நல உத்தியோகத்தர் வழங்கி வைத்தார். (150)



அச்சுவேலி தம்பாலை ஞானவைரவர் ஆலய கொடியேற்றத் திருவிழாவின் போது வைரவப் பெருமான் உள்வீதி வலம் வருவதை காணலாம். (85)

# "குவேனி" நாட்டுக்கூத்து

பாதுகாப்பு தலைமையகத்துடன் கலை, கலாசார விளையாட்டுத்துறை பண்பாட்டு அமைச்சு இணைந்து நல்லூர் உற்சவ பக்தி விழாவையொட்டி நாளை பூங்காவில நடைபெறவுள்ள கலாசார நிகழ்வில இந்திய கலைஞர்களின் நிகழ்ச்சிகளுடன் திருமறைக் கலாமன்றம் வங்கும் "குவேனி" என்ற நாட்டுக்கூத்து நடைபெறவுள்ளது.

தமிழர் பாரம்பரிய கலை வடிவமான இவ் நாட்டுக் கூத்தின் எழுத்துரு வாக்கத்தை திரு.ஜே.யோண்சன் ராஜ்குமார் அவர்களும் மன்ற இளம் கலைஞர்கள் பங்குகொள்ளும் மேற்படி கூத்தினை திரு.அன்று யூலியஸ் நெறியாள்கை செய்துள்ளார். (27)




வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# அமெரிக்க பத்திரிகையாளர் வெட்டிக்கொலை

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் கொடூரம்

## அஞ்சப்போவதில்லை என ஒபாமா சூளுரை

(மாசசூசட்ஸ்)

அமெரிக்க பத்திரிகையாளர் ஜேம்ஸ் போலி தலை துண்டித்துப் படுகொலை செய்யப்பட்ட செயல் ஒட்டுமொத்த உலகத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ஆனால் நாங்கள் ஈராக்கில் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறோமோ அதை நிறுத்தப் போவதில்லை. அஞ்சப் போவதில்லை. மக்களைக் காக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபடுவோம். எந்தக் கடவுளும் இந்த அக்கிரம செயலை பொறுத்துக் கொள்ள மாட்டார் என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா கூறியுள்ளார்.

அமெரிக்க பத்திரிகையாளர் ஜேம்ஸ் போலி கொடூரமாக தலை துண்டித்துக் கொலை செய்யப்பட்டதற்கு அவர் கடும் கண்டனமும் அதிர்ச்சியும் தெரிவித்தார். ஒட்டுமொத்த உலகமும் இந்த கொடூரமான் செயலால் அதிர்ந்து நிற்கிறது. ஆனால் அமெரிக்காவின் மக்கள் காக்கும் பணி தொடரும். ஈராக்கிலும், சிரியாவிலும் நாங்கள் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறோமோ அது தொடரும், தொடர்ந்து உறுதியுடன் செய்வோம், கவனத்துடன் செய்வோம்.

நான் ஜேம்ஸ் போலியின் குடும்பத்தினரிடம் தொலைபேசியில் பேசினேன். அவரது இழப்பால் ஒட்டுமொத்த அமெரிக்கர்களின் மனங்களும் சிதறிப் போயுள்ளதாக தெரிவித்தேன். ஜேம்ஸ் போலி ஒரு பத்திரிக்கையாளர், மகன், சகோதரன், நல்ல நண்பன், நல்ல குடிமகன். அவரது மரணம் ஒட்டுமொத்த மனித குலத்தின் மனசாட்சியை உலுக்கியுள்ளது.



ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இந்த உலகை அழிக்க வந்த புற்று நோய். நகரங்களையும், கிராமங்களையும் பிடித்து, அழித்து, அப்பாவி மக்களைக் கொன்று குவித்து வரும் கோழைகள். அப்பாவி பெண்களை பாலியல் பலாத்காரம் செய்து, அவர்களைச் சித்திரவதை செய்து அடிமைகளாக்கி வரும் கோழைகள். எந்த மதமும் அப்பாவிகளைக் கொல்லச் சொல்லுவதில்லை, ஜேம்ஸ் போலிக்கு நடந்ததை எந்த கடவுளும் ஏற்க மாட்டார்.

மேலும் ஒவ்வொரு நாளும் நடந்து வருவதையும் எந்தக் கடவுளும் ஏற்க மாட்டார். இதுபோன்ற குற்றங்களை இழைக்கும் நபர்கள் நிச்சயம் தோற்பார்கள். எதிர்காலத்தில் மக்கள்தான் வெல்வாரகள். அழிப்பவர்கள் வெல்ல முடியாது, ஆக்கப்பூர்வமானவர்கள் தான் வெல்வார்கள் இவ்வாறு ஒபாமா தெரிவித்தார். இதே வேளை ஜேம்ஸின் கொலை தொடர்பில் ஐ.நா.வும் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

# மன்மோகன் மீது வழக்கு

(வொஷிங்டன்)

பிரதமராக மன்மோகன் சிங் இருந்த காலகட்டத்தில் அவர் மீது அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்குத் தொடர முடியாத அளவிற்கு தடையாணை இருந்தது. அவர் நிதியமைச்சராக இருந்த காலகட்டத்திற்கு அத்தகைய சிறப்பு அந்தஸ்து வழங்க முடியாது“ என, அமெரிக்க நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில், 1980 ஆண்டுகளில் ஏற்பட்ட சீக்கிய தீவிரவாதம் மற்றும் அதைத் தொடர்ந்து நடைபெற்ற வன்முறை சம்பவங்களில், ஏராளமான சீக்கியர்கள் கொல்லப்பட்டனர்.

அந்தப் பிரச்சினைகளை இப்போது எழுப்பி, அமெரிக்க நீதிமன்றங்களில், அமெரிக்கா வாழ் சீக்கியர்கள், வழக்கு தொடர்ந்து வருகின்றனர். 1984இல் நடைபெற்ற சீக்கியர் படுகொலை, அந்த காலகட்டத்தில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, காங்கிரஸ் தலைவர் சோனியா, முன்னாள பிரதமர், மன்மோகன் சிங் மீது, நியூயோர்க் மற்றும் வொஷிங்டன் நகர நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.இதில், சில வழக்குகளில், சோனியா, மன்மோ கன் சிங் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க முடியாது என நீதிமன்றம் மறுத்தாலும், விடாப்பிடியாக, வேறு வேறு விவகாரங்களில் வழக்குகள் தொடர்ந்து வருகின்றன.



# ஜப்பானில் நிலச்சரிவு

# 39 பேர் பரிதாபமாக பலி



(டோக்கியோ)

ஜப்பான் நாட்டில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பலத்த மழை கொட்டி வருகிறது. இதில் ஹிரோசிமா நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

ஹிரோசிமா மலைகள் நிறைந்த பகுதியாகும். இங்கு மழையால் நேற்று முன்தினம் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. அதில் வீடுகளும், கட்டடங்களும் மண் ணோடு மண்ணாக புதைந்தன. இவற்றில் சிக்கி 39 பேர் உயிரிழந்தனர். 40இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டார்கள். ஏராளமான பேரை காணவில்லை. அவர்களும் மண்ணுக்குள் புதைந்து பலியாகி இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. கடந்த ஆண்டு ஓசிமா என்ற இடத்தில் இதேபோல நிலச்சரிவு ஏற்பட்டு 39பேர் பலியானார்கள். இதேபோன்று இப்போது நிலச்சரிவு ஏற்பட்டு பல உயிர்கள் பலியாகியுள்ளன.

# இராட்சத கைகளுடன் சிறுவன் திகைப்படையும் மருத்துவர்கள்

## இந்தியாவில் அதிசயம்



இந்தியாவில் எட்டு வயது சிறுவன் ஒருவனுக்கு தலையை விட கைகள் பெரிதாக உள்ளதால் மருத்துவர்கள் செய்வதறியாது குழம்பியுள்ளனர்.கலீம் என்ற 8 வயது சிறுவன் பிறக்கும்போதே இயல்பான குழந்தைகளின் விரல்களை விட இரு மடங்கு பெரிதான விரல்களுடன் பிறந்துள்ளான்.

இந்நிலையில், நாளுக்கு நாள் அவனது விரல்களின் வளர்ச்சி பெரிதாகியதால், உள்ளங்கையிலிருந்து நடுவிரலின் முடிவு வரை கணக்கிட்டால் 13 இஞ்ச் அளவுக்கு கைகள் வளர்ச்சியடைந்துள்ளன. தெரியவந்துள்ளது.இதனால் உடைகளை அணிந்து கொள்வதற்கும் மற்ற செயல்களை செய்வதற்கும் இச்சிறுவன் சிரமப்படவேண்டியுள்ளது.

மேலும், தன்னைப் பார்த்து மற்றவர்கள் பயப்படுவதால் தனது வாழ்க்கையே தனிமையில் கழிவதாக சிறுவன் கலீம் சோகத்துடன் தெரிவித்துள்ளான். கலீமின் பெற்றோர் 1500 ரூபாய் மட்டுமே மாத வருமானமாக சம்பாதிப்பதால், தங்கள் சக்திக்கு ஏற்ற வகையில் அவனது சிகிச்சைக்கு செலவு செய்துவருகின்றனர்.

அவனைப்பற்றி பெற்றோர் கூறுகையில், அவனை பரிசோதிக்கும் மருத்துவர்கள் மிகவும் குழம்பிப்போய்விடுவதாக தெரிவித்துள்ளனர்.


## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலரால் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர்விவகார அமைச்சின் கட்டத்தொகுதி- மருதங்கேணிப்பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டட வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
2. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் நிர்வாகக் கிளை. மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 22.08.2014 தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம். என்பதுடன் உதவி மாவட்ட செயலாளர் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல 0212222771) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றின் நிர்வாகக் கிளை மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 22.08.2014 முதல் 04.09.2014 வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 2.00 மணிவரையான காலப் பகுதியில் மீளளிக்கப்படாததொகையான 1000கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக் குழுமாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 05.09.2014 திகதியன்று பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால்மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக் கிளை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி தாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல்மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 05.09.2014 திகதி பி.ப. 3.00 மணிக்கு திறக்கப்படும் கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.
7. கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும். விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு 120 நாட்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்.


| கேள்வி இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மில்லியன்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத்தொகை | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| JF/DCDC/ SAFE HOUSE/ 07 | பாதுகாப்பு மத்திய ஸ்தானம் நிர்மாணம் | 11.70 | 06 மாதம் | C6 | 117,000.00 | 1000/- |
| JF/DCDC/ SAFE HOUSE/ 07 | சுற்று மதில், கிணறு,நீர்த்தாங்கி அமைத்தல் | 4.39 | 03 மாதம் | C8 | 44,000.00 | 1000/- |

**சுந்தரம் அருமைநாயகம்**
**அரசாங்க அதிபர் மாவட்ட செயலாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(C/3785)

# வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்துக்கு இலகு கடன்வழங்க ஏற்பாடு

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கென 20 இலட்சம் ரூபா இலகுகடன் வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு செய்துள்ளார்.

நேற்று அப்பகுதிக்கு விஜயம் செய்திருந்த அமைச்சர் மேற்படி சங்கத்தின் நிர்வாகத் தரப்பினரைச்சந்தித்து சங்கத்தின் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் பிரகாரமே மேற்படி கடன் தொகைக்கு அமைச்சர் ஏற்பாடு செய்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்கனவே மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக இச்சங்கத்தின் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டதும், சங்கத்திற்கென பாரவூர்தி ஒன்று வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பில் அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், கூட்டுறவு ஆணையாளர் அருந்தவநாதன், ஈ.பி.டி.பியின் வடமராட்சி இணைப்பாளர் ஸ்ரீ ரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# உள்ஹூர் தேவைக்கான விதை நெல் வெளியாருக்கு விற்பதாக குற்றச்சாட்டு

## கிளி. விவசாய சம்மேளனம் கண்டனம்

கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் காலபோக நெற்செய்கைக்கு விதை நெல்லைப் பெறும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நெல் உற்பத்தியை வெளிமாவட்ட நிறுவனங்களுக்கு கிளிநொச்சி விவசாயிகள் விற்பனை செய்து வருவதாக கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சம்மேளனம் நேற்று குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக சம்மேளனம் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோகச் செய்கையில் 59 ஆயிரம் தொடக்கம் 60 ஆயிரம் ஏக்கர்களில் நெற்செய்கை பயிரிடப்படும்.

அந்தவகையில், எதிர்வரும் காலபோகத்திற்கு விதை நெல்லைப் பெறும் பொருட்டு, இரணைமடுக்குளத்திலிருந்த நீரின் அளவைக் கொண்டு 450 ஏக்கர் நிலப்பரப்பில் கிளிநொச்சியில் சிறுபோகம் செய்கை பண்ணப்பட்டது.

சிறுபோகச் செய்கையின் அறுவடை தற்போது இடம்பெறும் நிலையில், அவற்றை வயல்களில் வைத்து வெளி மாவட்ட நிறுவனங்கள் கொள்வனவு செய்வதாலும், அதற்கிணங்க விவசாயிகள் அதனை விற்பனை செய்வதாலும், எதிர்வரும் கால போகத்திற்கான விதை நெல்லுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவ வுள்ளதாக சம்மேளனம் தெரிவித்தது.

450 ஏக்கரில் விளைவிக்கப்பட்ட நெல்லைக் கொண்டு 24 ஆயிரம் தொடக்கம் 25 ஆயிரம் ஏக்கர் நெற் செய்கையை மேற்கொள்ள முடியும் என்ற நிலையிருந்தது. இந்நிலையில் தற்போது, விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லையும் விற்பனை செய்வதால், பெருமளவு விதை நெல்லை காலபோகத்தில் கொள்வனவு செய்யவேண்டிய தேவையேற்படும் என சம்மேளனம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# மூப்பியல் விஞ்ஞானம் புதிய கற்கை நெறி

## கோரப்படுகிறது விண்ணப்பம்

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் நடாத்தும் மூப்பியல் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சமூகசேவை, விரிவுரை மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பான கல்வி மற்றும் ஆலோசனைகளை வழங்கும் சமூக அபிவிருத்தி நிறுவனம் இலங்கையில் முதற்தடவையாக இப் பயிற்சிநெறியை அறிமுகப்படுத்தியுள்ளது.

அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுவதற்கும் மூப்பியல் தொடரபான கல்வித்தகுதியைப் பெற்றுக்கொள்வதற்கும் வயோதிபரை பராமரிப்புத் துறையில் பயிற்சியாளராக பணியாற்றவும் வெளிநாடுகளில் காணப்படும் வேலைவாய்ப்புக்களுக்கும் இந்த டிப்ளோமா பாடநெறி உதவியாக அமையும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தரத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட இப்பாடநெறியான மூப்பியல் விஞ்ஞானம், சமூக மூப்பியல் விஞ்ஞானம், வயோதிபர் மற்றும் கலாசாரம், மூப்படைதலும் சமூகமும், உளநலம் மற்றும் வயோதிபர், சமூக கொள்கை மற்றும் மூப்படைதல் போன்ற விடயங்களை உள்ளடகியுள்ளது.

இவ்விடயங்கள் தவிர மேலதிகமாக செயன்முறை பயிற்சி வழங்கப்படவுள்ளதுடன் இறுதியில் ஆய்வறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்படவேண்டும். வார இறுதி நாட்களில் நடைபெற வுள்ள இப்பாடநெறி18 மாதங்களுக்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம ஆரம்பமாகவுள்ள இப்பாடநெறி சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைபெறவுள்ளன. சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பதிவாளர், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இல 488A, நாவல வீதி, ராஜகிரிய என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலமாக விண்ணப்பப்படிவத்தைப பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை 011-2882506/7 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

### வறட்சியால்...

இதேபோல் கிளிநொச்சியிலும் அரச அதிபர் தலைமையில் இக் கூட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர், நெடுந்தீவு போன்ற பகுதிகளில் உடனடித் தீர்வும் கிளிநொச்சியில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி போன்ற பகுதிகளில் உடனடித் தீர்வும் தேவைப்படுவதாகவும்,

நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர், நல்லூர் கோப்பாய், சங்கானை சண்டிலிப்பாய், தெல்லிப்பளை, சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, போன்ற பகுதிகளுக்கு நீண்ட கால தேவை குறித்தும் கண்டறியப்பட்டதுடன்,

யாழ்ப்பாணத்திற்கு 15 உழவு இயந்திர தாங்கிகள், 8 லொறி நீர்த்தாங்கிகளும், 143 நீர்த் தாங்கிகளும் உடனடி தேவைகளாக இனம்காணப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் 31,284 குடும்பங்களைச் சேர்ந்த 1,20051 அங்கத்தவர்களுக்கும், கிளிநொச்சியில் 21,294 குடும்பங்களைச்சேர்ந்த 74834 அங்கத்தவர்களுக்கும் உடனடி நிவாரணம் வழங்க வேண்டியுள்ளது.

இவ்வாறு இனங்காணப்பட்டு இவர்களுக்கான உடனடி நிவாரணம் வழங்க அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

வறட்சி தொடர்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு பதிலளிக்கையிலேயே எதிர்க்கட்சித்தலைவர் இவ்வாறு தெரிவித்தார். (இ)

### உள்நாட்டில்...

பாதிக்கப்படக்கூடிய ஆபத்துள்ளது என்று தெரிவிப்பதன் மூலமாக ஏனைய நாடுகள் குறித்து அச்சத்தை ஏற்படுத்தி உள்ளூர் செல்வாக்கை அதிகரிக்கும் முயற்சி இதுவென அவர் தெரிவித்துள்ளார்.

### 13ஐ அமுல்படுத்த...

னர் சிவசக்தி ஆனந்தன் கூறியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நரேந்திரமோடியை சந்திப்பதாக இருந்தால் வடக்கு, கிழக்கு இணைந்த ஒரு சுயாட்சி அதிகாரங்கள் பற்றி பேச வேண்டும் என்றும் அத்துடன் இலங்கை அரசாங்கத்துக்கு கண்டிப்பான உத்தரவுடன் கூடிய செயற்பாட்டு பொறிமுறை ஒன்றுக்கு வழி சமைக்க வேண்டும் என்றும் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக பேசுவதில் அர்த்தம் இல்லையென கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் தெரிவித்தார். என்றும் ஆனாலும் இது தொடர்பில் கருத்து வெளியிட சுரேஷ் பிரேமச்சந்திரன் விரும்பவில்லை எனவும் மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றது.

அதேவேளை முதலில் இந்தியாவுக்குச் சென்று புதிய பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்து கலந்துரையாடுவோம் என்றும் பின்னர் அரசியல் விடயங்களைப் பற்றி பார்க்கலாம் என்றும் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்திக்கு இந்திய அரசு நேரடியாக உதவி வழங்க வேண்டும் என கூட்டமைப்பு கோரிக்கை விடுக்கும் என்றும் மாவை சேனாதிராஜா கூறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### எதிர்க்கட்சித்...

சுமத்தப்பட்டன. அதை முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளமுடியாது. எனது மனச்சாட்சிப்படி அவரை குற்றம் சொல்ல முடியாது.

அன்று அதிகநேரம் எடுத்து உரைநிகழ்த்தினார். ஆளும் கட்சியினருக்கு நியதிச்சட்டம் இயற்றத்தெரியாது. எனத் தெரிவித்தார்.

அது பிழை என கூற முடியாது. அவ்வாறு பேசுவதற்கு அவர் தள்ளப்பட்டார்.

வயதான நேரத்திலும் எமக்கு 6,7 மணிநேரம் இந்த நியதிச் சட்டம் உருவாக்க எமக்கு ஒத்தாசையாக இருந்தார். அவரது இந்த சேவை நியதிச் சட்டம் அமைவதற்கு அடிப்படையாக அமைந்திருந்தது.

ஆனால் எமது தரப்பிலிருந்து அவர்மீது தேசத்துரோகி என்று வார்த்தைப்பிரயோகம் பிரயோகிக்கப்பட்டமையாலேயே அவர் அன்று அவ்வாறு பேச வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு பேசுவதற்கு தள்ளப்பட்டார். அவ்வாறு அன்றைய அமர்வில் எமது தரப்பால் பேசப்பட்டமைக்காக நான் எதிர்க்கட்சித் தலைவரிடம் மன்னிப்புக்கோருகிறேன் என்று கடற்றொழில் அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவித்தார். (இ)

### விஜயகாந்த்...

னாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றிரவு 9 மணியளவில் நல்லூர் செட்டித்தெருவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. நல்லூருக்கு சென்றுவிட்டு திரும்பியவேளை இலக்கத்தகடற்ற மூன்று மோட்டார் சைக்கிள்களில வந்தவர்கள் இவர்மீது தாக்குதலை நடாத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. (இ,25)

### வரம்பு...

தெரிவித்து அவையில் இருந்து வெளியேறினர். இதன்போது எதிர்க்கட்சி வரிசையில் உள்ள முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் முகமட் றயிஸ் வெளிநடப்பு செய்யாது அங்கேயே அமர்ந்து இருந்தார். எனினும் ஆளும்கட்சி உறுப்பினர்கள் சிலரதும், முதலமைச்சரினதும் ஆலோசனைகள் மற்றும் விளக்கங்களைத் தொடர்ந்து சிவாஜிலிங்கத்தின் 2ஆம் 3ஆம் பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டன. தொடர்ந்து முதலாவது பிரேரணை தொடர்பில் கட்சித் தலைமையுடன் பேசி திருத்தங்களுடன் அடுத்த அமர்வில் பிரேரிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டபோது சில ஆளும்கட்சி உறுப்பினர்கள் சிவாஜிலிங்கத்தை கேலிசெய்யும் வகையில் தட்டி ஆரவாரித்தனர். இதனை அடுத்து எதிர்க்கட்சியினர். மீண்டும் அவை அமர்வுகளில் கலந்து கொண்டனர். (இ)

### கட்சிக்கு...

தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான விசாரணைகளை விரிவு படுத்துமாறு 33 வடக்கு, கிழக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 33 மாகாணசபை உறுப்பினர்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிடம் எழுத்து மூலம் கோரியிருந்தனர்.

இவர்களின் இந்தக் கோரிக்கை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

மாகாணசபை உறுப்பினர்களின் நடவடிக்கைகள் குறித்து கட்சித் தலைமைக்கு எதுவும் தெரியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், எம்.கே.சிவாஜிலிங்கம், டாக்டர் பீ.சத்தியலிங்கம், ரீ. குருகுலராஜா உள்ளிட்ட 33 உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்

# இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க பிறநாட்டவருக்கு அனுமதி இல்லை

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தவொரு நாட்டிற்கும் இந் நாட்டு கடல் எல்லைக்குள் நுழைந்து மீன் பிடிக்க இடமளிக்கப் போதில்லை என கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

பாரதிய ஜனதாக் கட்சியின் திட்ட செயற்பாட்டுக் குழுத் தலைவர் சுப்ரமணியம் சுவாமி நேற்று முன்தினம் பாதுகாப்பு மாநாட்டில் தெரிவித்த கருத்திற்கு பதிலளிக்கும் வகையில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார்க் குடாவில் மீன் விருத்தி செய்வதற்கு பல காலங்கள் செல்வதால் மூன்று வருடத்திற்கு இந் நாட்டு கடற் பரப்பில் மீன் பிடிக்க இடைக்கிடை அனுமதி வழங்குமாறு சுப்ரமணிய சுவாமி கேட்டுக்கொணடார்.

எனினும் இதுதொடர்பாக கடற்றொழில் அம்மைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளதாவது,

30 ஆண்டுகள் துன்பங்களை அனுபவித்து தற்போது தான் எமது மீனவர்கள் கடலுக்கு சென்று வருமானத்தை பெற்றுக் கொள்கின்றனர். எதிர்காலத்தில் 50 வீதமாக வருமானத்தை அதிகரிப்பதே எமது வேலைத் திட்டமாகும். ஜனாதிபதி எமக்கு வழங்கிய ஒத்துழைப்பினால் கடந்தாண்டு டிசம்பர் மாதமாகும் போது 23 வீதமாக மும்மடங்கால் வருமானத்தை அதிகரிக்க முடிந்தது. இன்னும் ஒரிரு வருடங்களில் 50 வீத இலக்கை அடைவோம்.

இதற்கு இருக்கும் பாரிய தடையாக இந்திய மீனவர்களின் வருகையே காணப்படுகின்றது. ஆகவே எவருக்கும் எமது கடற்பரப்பிற்குள் மீன் பிடிக்க இடமளிக்க போதில்லை.

அவ்வாறு வர விரும்புகின்றவர்கள் எமது நாட்டுடன் கலந்துரையாடி முதலீட்டு நடவடிக்கைகள் மீது வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு அல்லாது இந்திய மீனவர்களுக்கு எமது கடலைத் திறந்து விட முடியாது. எமது பொருளாதார வலயத்தை யாருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது எனத் தெரிவித்தார்.

# முகப்பூச்சு உற்பத்திப் பொருட்கள் கொள்வனவில் அவதானம் தேவை

## வியாபாரிகளுக்கு அறிவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் தாங்கள் கொள்வனவு செய்து, விற்பனை செய்யும் முகப்பூச்சுக்களை உரிய முகவர்களிடம் பெற்று விற்பனை செய்யவேண்டும் என யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அதிகார சபையினர் நேற்று தெரிவித்தனர்.

அவ்வாறு உரிய முகவர்கள் ஊடாகக் கொள்வனவு செய்யாத வியாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகார சபையினர் கூறியுள்ளனர்.

வியாபாரிகள் உரிய முகவர்கள ஊடாக முகப்பூச்சுக்களைக் கொள்வனவு செய்து, அவை தரமானவையாக இல்லாதுவிடின், அந்த முகவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

ஆனால், அனுமதி பெறாதவர்களிடம் இருந்து வியாபாரிகள் முகப்பூச்சுக்களைக் கொள்வனவு செய்து அவை தரமற்றவையாக இருந்தால், அந்த முகவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. மாறாக கொள்வனவு செய்த வியாபாரிகள் மீதே நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

ஆகவே, தங்களையும் தங்கள் வாடிக்கையாளர்களையும் பாதிக்காத வகையில் வியாபாரிகள் உரிய முகவர்களிடம் முகபூச்சுக்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என சபையினர் மேலும் கேட்டுக்கொண்டனர்.

யாழ் மாவட்டத்தில் அண்மையில் தரமற்ற முகப்பூச்சுக்கள் விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டு, அது தொடர்பில் 2 விநியோகஸ்தர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய விநியோகிக்கப்பட்ட முகப்பூச்சுக்கள் மீளப் பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மோடி – கூட்டமைப்பு நாளை சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பிரதிநிதிகள் நாளையதினம் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியை சந்திக்கவுள்ளதாக இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தன் தலைமையிலான 5 பேர் அடங்கிய குழு நேற்று புதுடில்லி நோக்கி பயணமாகியது. முதற்தடவையாக இந்தியப் பிரதமரை சந்திக்கவுள்ள இக்குழு பல விடயங்கள் தொடர்பில் இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடவுள்ளது. இதில் வடமாகாணசபை அதிகாரப்பரவலாக்கம் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளது. மேலும் இக்குழு இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தொவால் ஆகியோரையும் சந்திக்கவுள்ளது.

இக்குழு தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஜெயலலிதாவையும் சந்தித்து வடமாகாணசபை அதிகாரம் தொடர்பில் கலந்துரையாடவுள்ளது என்றும் இந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

# பலஸ்தீனத்திற்கு நிதியுதவி சட்டவிரோதமான செயற்பாடு

## என்கிறார் சரத்என்.சில்வா

(கொழும்பு)

பலஸ்தீனத்திற்கு ஜனாதிபதி நிதி உதவி வழங்கிய முறைமை சட்டவிரோதமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நிதி அமைச்சின் செயலாளரும், நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவும் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடுவது அரசியல் சாசனத்தின் 148 ஆவது சரத்தை மீறும்செயலாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்டத்திற்கு புறம்பாக இந்தப் பணம் செலவிடப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்திற்கு புறம்பாக இவ்வளவு பாரிய தொகை பணத்தை செலவிட வேண்டுமாயின் குறைநிரப்புப் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்து அதற்கான அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமானது எனஅவர் தெரிவித்துள்ளார.

பொதுமக்கள் பணம் தொடர்பில் 148ஆம் இலக்க சரத்தின் அடிப்படையில் வரையறுக்கப் பட்டுள்ளது.

இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்ரேலியா உள்ளிட்ட அனைத்து ஜனநாயக நாடுகளினதும் நிதி நிர்வாகம் நாடாளுமன்றின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் பணத்தை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தனக்கு விரும்பியவாறு செலவிட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகவும், ஜனாதிபதியினால் நன்கொடையாக வழங்கப்பட்ட பணத்தை ஈடு செய்ய நாடு மீண்டும் கடன் பெற வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்கு அரசாங்கத்தின் மொத்த வருமானம் போதுமானதாக இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கள்ள மரம் கடத்திய இருவர் பிடிபட்டனர்

(கிளிநொச்சி)

சட்டவிரோதமாக அரிந்த முதிரை மரங்களையும் மர உற்பத்திப் பொருட்களையும் கடத்திய இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர

துணுக்காயில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இவ் மரங்களைக் கடத்திச் சென்ற வேளை கிளிநொச்சியில் வைத்து நேற்று மாலை 6 மணி யளவில் இக் கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட இருவரும் கைது செய்யப்பட்டனர். (81)

# போதைப் பொருள் தடுப்பு உளவுத் தகவல்களை பரிமாற இந்தியா–இலங்கை இணக்கம்

(கொழும்பு)


போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் பரஸ்பரம் உளவுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு இலங்கை - இந்திய போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் முடிவு செய்துள்ளதாக தமிழகத்திலிருந்து வெளிவரும் தினமணி நாளிதழ் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற இந்திய-இலங்கை போதைப்பொருள் தடுப்புப் பிரிவு உயரதிகாரிகளின் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் இலங்கையில் இருந்து வடக்கு மாகாண பொலிஸ மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தலைமையிலான குழுவினரும் இந்தியாவின் சார்பில் அந்நாட்டு தேசிய போதைப பொருள் தடுப்புப் பிரிவின் உதவி இயக்குநர் விஜயகுமார் தலைமையிலான குழுவினரும் கலந்து கொண்டனர்.

இதில் இரு நாடுகளினிடையே கடல், வான் வழியாக போதைப் பொருள் கடத்தலைத் தடுக்க கையாளப்படும் உத்திகள் குறித்து விவாதிக்கப்பட்டது. அத்துடன் போதைப் பொருள் கடத்தல் காரர்கள் தொடர்பான விபரங்கள், அவர்களின் நடமாட்டங்களை இலங்கை - இந்திய உளவு அமைப்புகள் கண்காணித்து, அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தால் அது தொடர்பான விவரங்களையும் பகிர்ந்து கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக விசேட முகாமிலுள்ள வவுனியா வாசிக்கு திருமணம்

## சுற்றுலா விசாவில் சென்றார் மணப்பெண்



தமிழகத்தில் விசேட முகாமில தடுத்து வைக்கப்பட்டிருந்த வரை இலங்கையில் இருந்து சுற்றுலா விஸா மூலம் சென்ற பெண் திருமணம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டதையடுத்து நேற்று முன் தினம் திருமணம் இடம்பெற்றதாக தினத்தந்தி நாளிதழ் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு செய்யாறு விசேட முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வவுனியாவைச் சேர்ந்த கிருஷ்ணலிங்கம் (வயது 33) என்பவர் கடந்த 2011 ஆம் ஆண்டு போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு சென்றுள்ளார் எனத் தெரிவித்து சென்னை கியூ பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பின்னர் அவர் செய்யாறு விசேட முகாமில் தடுத்து வைக்கப்பட்டார். இந்நிலையில் தான் திருமணம் செய்வதற்கு அனுமதிக்குமாறு கோரி கடந்த 8 ஆம் திகதி உள்ளூராட்சித் திணைக்களம் ஊடாக மாநில அரசாங்கத்திடம் அவர் கோரிக்கை விடுத்திருந்தார். அவரின் திருமணத்துக்கு அனுமதியளிக்கப்பட்டதையடுத்து மணப்பெண்ணான அவரது உறவுப் பெண்ணான வசந்தமலர் மூன்று மாத சுற்றுலா விஸாவில் அங்கு சென்றார்.

இதையடுத்து நேற்று முன் தினம் இவர்களின் திருமணம் பலத்த பாதுகாப்புடன் எளிய முறையில் நடைபெற்றது. பதிவாளர் அலுவலகத்துக்கு அண்மையாக இருந்த சிறிய முருகன் கோவிலில் மணப்பெண் வசந்தமலருக்குத் தாலி கட்டிய மணமகன் கிருஷ்ணலிங்கம் பின்னர் பதிவுத்திருமணம் செய்து கொண்டார்.

இந்தத் திரும ணத்தில் மணப் பெண்ணுக்கு நெருக்கமான 5 உறவினர்கள் கலந்துகொண்டனர். திரு மணத்தின் பின்னர் மணமகள் சென்னை பல்லாவாரத்தில் உள்ள அவரின் உறவினரின் வீட்டுக்கு சென்றுவிட்டார். விசேட முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கிருஷ்ணலிங்கத்தை காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை அவர் சந்திக்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# சத்தியப்பிரமாணம்

நாடாளுமன்ற உறுப்பினர்களான பி.திகாம்பரம், பிரபா கணேசன் ஆகியோர் பிரதி அமைச்சர்களாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில், நேற்று அலரிமாளிகையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

தகவல்தொழில்நுட்ப பிரதி அமைச்சராக பிரபா கணேசனும், மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு பிரதி அமைச்சராக திகாம்பரமும் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.